தமிழும் தெலுங்கும்

முனைவர் தா.சா. மாணிக்கம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழும் தெலுங்கும்

முனைவர் தா. சா. மாணிக்கம்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
உஸ்மானியா பல்கலைக்கழகம்,
ஹைதராபாத்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
சி. ஐ. டி. வளாகம், தரமணி (அஞ்சல்) சென்னை-600 113.

கலா நிலையம் டி. என். சேஷாசலம்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-1
(24, 25-10-90)

Kalanilayam T. N. Seshachalam Endowment Lecture No.1
Endowment Publication No. 50

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tamiḻum Teluṅkum
Author	:	Dr T. S. MANICKAM (Retd.) Head of the Dept. of Tamil; Osmania University, Hyderabad-500 007.
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113,
Publication No.	:	188
Language	:	Tamil
Date of Publication	:	Sep. 1994
Edition	:	First
Paper Used	:	Tamil Nadu Greamove (m) 16kg
Size	:	21 × 14 cms
Printing types	:	10 point
No. of Copies	:	1200
No. of Pages	:	VI + 83
Price	:	Rs. 15/-
Printers	:	Pavai Printers Pvt. Ltd. Madras-14, Phone: 832441
Artist	:	Sathya
Subject	:	A Comparative study on Tamil and Telugu

---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல,

பதிப்புரை

இலக்கிய இதழ் வழித் தமிழ் வளர்த்த பெருந்தகை வழக்கறிஞர் டி. என். சேஷாசலம் அவர்களின் நினைவுப் போற்றுதலாக நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட 'கலாநிலையம் டி. என். சேஷாசலம் அறக்கட்டளை'யின் முதற் சொற்பொழிவு இந்நூல்.

தமிழுக்கும் பிறமொழிகளுக்கும் உள்ள தொடர்பினை ஆய்ந்துணர்த்த விரும்பிய அன்றைய இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள், ஹைதராபாத் உசுமானியா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் முனைவர் தா. சா. மாணிக்கம் அவர்களுக்குத் 'தமிழும் தெலுங்கும்' பற்றிய ஒப்பியல் சொற்பொழிவிற்கு அழைப்பு விடுத்தார். அதனை ஏற்றுக் கொண்டு அக்டோபர் 1990இல் பேராசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவு இன்று நூலாக்கம் பெற்றுள்ளது.

தமிழர், தெலுங்கர் இடையே நிலவும் மொழி, அரசியல், இலக்கிய உறவுகளை வரலாற்றோடு இணைத்துச் சிறப்பான முறையில் ஒப்பாய்வு செய்துள்ளார். ஒப்புமைச் சொற்களின் அகர வரிசை பெரிதும் பயனுடையது. தமிழ், தெலுங்கு ஒப்பியல் கல்விக்குச் சிறந்த கொடையாக இந்நூலை அளித் துள்ள பேராசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவிய சான்றோர், கலா நிலையம் டி. என். சேஷாசலம் அவர்களின் புதல்வர் திரு. பரணீதரன் (மெரீனா) அவர்கள்; சொற்பொழிவிற்கு அழைப்பு விடுத்த மேனாள் இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள்; நூலாக்கத்திற்குத் துணை நின்ற இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத் திருத்தியும் சிறப்புச் சொல்லகராதி தயாரித்தும் உதவிய ஆய்வாளர் திரு. பு. பாலாஜி; செவ்வையாக அச்சிட் டுள்ள பாவை பிரிண்டர்ஸ் ஆகிய அனைவருக்கும் எங்கள் நன்றி.

அன்புடன்
ச. சிவகாமி
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை-113
5-9-94

ஆசிரியர் அறிமுகம்

முனைவர் தா. சா. மாணிக்கம்

சென்னை மாநிலக் கல்லூரியில் (1955-1957) தமது தமிழ்ப் பணியைத் தொடங்கியவர், 1957 முதல் ஓய்வு பெறும் வரை ஆந்திர மாநில, உசுமானியா பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றினார். அத்தமிழ்த் துறையின் முதல் தமிழ் முனைவர் பட்டம் பெற்றவர் என்ற சிறப்பினையும் 'விசயநகரப் பேரரசு காலத்துத் தமிழ், தெலுங்கு இலக்கிய வளர்ச்சி' எனும் ஆய்வேட்டின் வழிப் பெற்றவர்.

1985 இல் தமிழ்ப் புரவலர் ஆ. வ. பட்டாபிராம் முதலியாரின் துணையுடன் தமிழ் இலக்கியச் சங்கத்தினைத் தோற்றுவித்து அங்குள்ள தமிழரிடையே தமிழார்வத்தை வளர்த்து வருகிறார். தமிழ் மாணாக்கருக்காகப் பல்வகைப் போட்டிகளையும் அறிமுகப்படுத்திக் கல்லூரிகளுக்குள்ளேயும் வெளியேயும் தமிழிலக்கிய அறிவினை மாணாக்கர்க்கும் மற்றையோர்க்கும் ஊட்டியவர். இவரது முயற்சியால் ஆண்டு தோறும் தமிழ் மலர்கள் மலர்கின்றன.

'திருக்குறள் செல்வர்' என்றும் 'சிலம்பிசைப் புலவர்' என்றும் போற்றப்படுகின்றார்.

இவர்தம் கவிதைகள், கட்டுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியன தமிழக, ஆந்திர, இலங்கை இதழ்களிலும் சிறப்பு மலர்களிலும் வெளிவந்துள்ளன.

முன்னுரை (தொலிமாட)

தமிழும் தெலுங்கும் நெருங்கிய உறவுடையவை. அவற்றின் மொழிக்கூறுகள் பலவும் ஒன்றை ஒன்று ஒத்தனவாய் வழங்கு வதை மொழி நூலறிஞர்கள் எடுத்துக்காட்டி வந்துள்ளனர்.

கங்கை கொண்ட சோழனான முதலாம் இராசேந்திர னுடைய மகளாகிய அம்மங்கதேவியைத் திருமணம் செய்து கொண்டவன் சாளுக்கிய அரசன் இராசராச நரேந்திரன். இம்மன்னனே வைதீகநெறியை வளர்க்கும் வகையில் நன்னயரைக் (தெலுங்கு முதலாசிரியர்) கொண்டு, பாரதத்தினைத் தெலுங்கில் (11ஆம் நூற்றாண்டில்) செய்வித்தான். சைவ சமயம் காரண மாகச் சிவத்தொண்டர்களின் வரலாறு தெலுங்கில் படைக்கப் பட்டன. வைணவ சமயம் காரணமாக ஆண்டாளும் ஆழ்வார் களும் தெலுங்கில் போற்றப்பட்டனர். கிருஷ்ணதேவராயர் சூடிக் கொடுத்தாளுக்குப் 'பிரபந்தம்' படைத்தார்.

விசயநகரப் பேரரசு தென்னாட்டில் கால் கொண்டு தெலுங்கு-தமிழ் உறவைப் பெரிதும் வலுவடையச் செய்தது.

காவிரிக் கரையிலும், வைகைக் கரையிலும் வாழ்ந்து வந்த குடும்பங்கள், கோதாவரிக் கரையிலும் கிருஷ்ணா நதிக்கரை யிலும் குடியேறின.

கோதாவரிக் கரையிலும் கிருஷ்ணா நதிக் கரையிலும் வாழ்ந்து வந்த குடும்பங்கள் காவிரிக்கரையிலும், வைகைக் கரையிலும் குடியேறின.

மொழியுறவும், பண்பாட்டுறவும் சிறந்து வளரத் தொடங் கின.

இதன் பயனாகத் 'தமிழும் தெலுங்கும்' நூல் இன்று மலர்ந் துள்ளது.

தா. சா. மாணிக்கம்

உள்ளே

பக்கம்

அரசியல் தொடர்பு	...	1
இலக்கியம்	...	19
புலவரும் புரவலரும்	...	35
மொழித் தொடர்பு	...	42
தெலுங்கு, தமிழ்ப் பொதுச் சொற்கள்	...	56
துணை நூற்பட்டியல்	...	78
சிறப்புச் சொல்லகராதி	...	81

அரசியல் தொடர்பு

**பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!**

தமிழைத் தாய்மொழியாகவும் தெலுங்கு முதலிய திராவிட மொழிகளைச் சேய்மொழிகளாகவும் பேராசிரியர் சுந்தரனார் இசைத்ததைத் தெலுங்கு மொழியறிஞர் ஏற்றுக் கொள்ளவில்லை. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை இயற்றிய கால்டுவெல்லின் 'தெலுங்கு, திராவிட மொழிகளுள் ஒன்று' என்ற கருத்தையும் அக்காலத் தெலுங்கு மொழியறிஞர் ஏற்றுக் கொள்ளவில்லை; தெலுங்கு மொழியை ஆரிய மொழியாகவே போற்றிக் கொண்டாடுவதில் பெருமை கண்டனர். தெலுங்குமொழி திராவிட மொழியே என்னும் கருத்தினை ஏற்றுக்கொண்ட பின்னர், தெலுங்கு மொழியறிஞர், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகளுக்கு மூலமொழியாக இருந்தது 'திராவிடம்' என்பதையே ஒப்புக் கொண்டனர்.

'திராவிடம்' என்னும் சொல்லே தமிழ் எனத் திரிந்தது என்றும், 'தமிழ்' என்னும் சொல்லே 'திராவிடம்' என மருவிற்றென்றும் அறிஞர் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிவந்தனர்.

எனினும், தமிழும் தெலுங்கும் நெருங்கிய உறவுடையன என்னும் உண்மையைத் தெலுங்கு மொழியியலார் நாளடைவில் ஏற்றுக் கொண்டனர். பழமை, சொற்களஞ்சியம் எனுமிவற்றை நோக்கத் தமிழுக்கு அடுத்ததாகக் கருதப்படுவது தெலுங்கு.

வடமொழியாளர் தெலுங்கை ஆந்திர(ம்) என்று அழைத்தனர். தெலுங்கு மக்கள் வாழும் ஆந்திரப் பெருநிலம் ஆந்திரா, இராயல சீமா, தெலுங்கானா என்னும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்தமைந்தது. மொழி வழியாக மாநிலங்கள் பிரிந்த பின்னர் இம்மூன்று பகுதிகளும் ஒன்றியமைந்தன. ஆந்திராவில் வாழுவோர் தங்களை ஆந்திரர் என்று குறிப்பிடுவதையே பெருஞ் சிறப்பாகக் கருதுவர். தெலுங்கானா பகுதிகள் நிசாமின் ஆட்சியின்கீழ் இருந்ததால் அம்மக்கள் பேசும் மொழியும் நடையுடை பழக்கவழக்கங்களும் சற்றே மாறுபட்டிருந்தது. இம்மாறுபாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருவதைக் காண்கின்றோம்.

கிழக்குத் திசையின் இத்தாலிய மொழி (Italian of the east) என்று போற்றப்படும் தெலுங்கு மொழியின் இனிமையைக் கால்டுவெல் தம் நூலுள் சிறப்பித்துக் கூறுகின்றார்.

தமிழும் தெலுங்கும் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது அரசியல் சூழ்நிலைகளே.,

தெலுங்கு மொழியின் இலக்கிய வரலாறு பாரதத்துடன் தொடங்குகிறது. தமிழ்க் குந்தவையின் மகனான இராஜராஜ நரேந்திரன் பாரதத்தைத் தெலுங்கில் இயற்றித் தருமாறு வேண்டிக் கொண்டான். பெரியபுராணம் தமிழில் எழுந்ததற்குரிய சமணர் தொடர்பான காரணமும் தெலுங்கில் பாரதம் எழுந்ததற்குரியதாகக் கூறப்படுகின்றது.

நன்னெ சோட தேவர் (1150-70)குமார சம்பவத்தைத் தெலுங்கில் தந்தார். சோழ அரசர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று தம்மை அழைத்துக் கொள்வதில் பெருமையடைகிறார். (குமார சம்பவம் 1:51, 52,54).

பண்டிதாராத்ய சரித்திரத்தினைத் தந்த பால்குரிசி சோமனாதர் தம்முடைய நூல்களுள் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பாடுகின்றார்.

ஸ்ரீநாதர் என்னும் புகழ்சான்ற தெலுங்குப் புலவர் அனவேமா ரெட்டியின் அவையில் இருந்தார். இவர் பாடிய ஹரவிலாசத்துள் சிறுத்தொண்ட நாயனாரின் வரலாற்றைக் காணலாம்.

இக்கதையே 'சீயாள சரித்திரம்' என்றும் தெலுங்கு மக்களிடையே வழங்கி வருகிறது.

கிருஷ்ணதேவராயர் வைணவத்தில் பற்று மிகுந்தவர். ஆந்திர மகா விஷ்ணுவின் கட்டளையைத் தலைமேற் கொண்டு தாமியற்றிய 'ஆமுக்த மாலியதா' என்னும் நூலுள் விஷ்ணு சித்தரையும் (பெரியாழ்வார்) யமுனாச்சாரியாரையும் (ஆளவந்தார்) கோதாதேவியையும் (சூடிக் கொடுத்தாள் ஆண்டாள்) போற்றிப் பாடியுள்ளார்.

கவி தூர்ஜடி தம் காளத்தி மகாத்மியத்துள் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும், சங்கப் பலகையைப் பற்றியும், தமிழ்ப் பெரும் புலவர் நக்கீரரைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

கண்ணப்ப நாயனாரின் வரலாறு காளத்தி மகாத்மியத்தில் இடம் பெறுகின்றது. கண்ணப்பநாயனார் வரலாறும் தெலுங்கு மக்களிடையே பெரிதும் வழக்கத்திலுள்ளதாகும். அவ்வண்ணமே, தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் வரலாறு தெலுங்கு மக்களிடையே சிறப்பாக வழங்கக் காண்கின்றோம். 'விப்ரநாராயணர்' என்னும் பெயரில் இக்கதை வழங்கக் காணலாம்.

குலசேகர ஆழ்வாரின் வரலாறு; 'குலசேகர மகிபால சரித்திரமு' என வழங்குகிறது. தெலுங்கு வைணவப் பெரு மக்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைப் போற்றுவதை இன்றும் காணலாம்.

கவியரசர் கம்பர், முதல்பிரதாபருத்திரன் காலத்தில் ஓரங்கல் (வாரங்கல்) நாட்டிற்குச் சென்றிருந்தார் என்றும் காகதீய அரசனான பிரதாபருத்திரனால் போற்றப்பட்டார் என்றும் அறிகிறோம்.

தமிழ்ப் புலவரான குமார சரசுவதி, மண்டல புருடர், (சூடாமணி நிகண்டின் ஆசிரியர்) ஞானப் பிரகாசர், தத்துவ ராயர், அரிதாசர் முதலியோர் தெலுங்குப் பேரரசர்களைப் பாடியுள்ளனர்.

தெலுங்கு மக்கள் தமிழ் நாட்டிலும் தமிழ் மக்கள் தெலுங்கு நாட்டிலும் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். ஏறக் குறைய தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வளர்ந்து வரும் தமிழர்—தெலுங்கர் தொடர்புக்குரிய அரசியல் நிகழ்ச்சி களைக் காண்போம்.

விசயாலய சோழன் பல்லவருடன் நட்புரிமை பூண்ட ஒரு சிற்றரசனாக இருந்தான். இவனே தஞ்சாவூரை முத்தரையரிடமிருந்து கைப்பற்றிப் பிற்காலச் சோழப் பேரரசிற்கு வித்திட்டான்.[1] இவன் காலத்திலிருந்து வளர்ந்து வந்த சோழ அரசு நானூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப் பேரரசாகச் சிறந்தோங்கித் திகழ்ந்தது. தமிழகம் முழுவதும் சோழப் பேரரசின் திருக்குடைக் கீழ் வந்துற்றது. தமிழகத்திற்கு வடக்கே இருந்த நிலப்பகுதிகளுள்ளும் சோழர்வீறு சிறந்து விளங்கியது. கங்கைப் பகுதிகளிலும் வங்கக் கடலுக்கு அப்பாலும் சோழருடைய வீரம் விளக்கும் புலிக்கொடி நிமிர்ந்து பறந்தது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை 'தமிழர் வரலாற்றில் மீண்டும் ஒரு பொற்காலம்' என்று போற்றும் வண்ணம் சோழருடைய ஆட்சித் திறனும், ஊராட்சி முறைகளும், கலைச் செழிப்பும், கட்டட அமைப்பும், கோயில்கள் எழுச்சியும் சிறந்து விளங்கலாயின. இக்காலத்துச் சோழப் பேரரசர் சமயப் பற்றுமிக்குடையவராய்த் திகழ்ந்தனர். இலக்கியங்கள் செழித்து வளரலாயின. அவை காரணமாகத் தமிழர் நாகரிகம் விளக்க முறலாயிற்று.

சோழரும் சாளுக்கியரும் போரிட்ட வண்ணமிருந்தனர். இராசராசன் வேங்கி நாட்டைத் தாக்கினான். வேங்கியை வென்று வாகை சூடினான். வேங்கியிலிருந்து கொண்டு வந்த பொன்னையும் பொருளையும், கொண்டு தஞ்சை மாநகரத்தில் இராசராசேச்சுவரர் கோயிலைக் கட்டினான்.[2]

சோழ அரசருக்கும் வேங்கியரசருக்குமிடையே நிகழ்ந்த போர்கள் அவரிடையே புதிய உறவுகளுக்கு வித்திட்டன. சோழ அரசர் சாளுக்கிய அரசருடன் திருமண உறவு கொள்ளலாயினர். கீழைச் சாளுக்கியருள் ஒருவனான விமலாதித்தியன் (கி.பி. 1015-1022) முதல் இராசராசன் மகளாகிய குந்தவையைத் திருமணம் புரிந்துகொண்டான். சோழ, சாளுக்கிய அரச பரம்பரைகளில் அடுத்த தலைமுறையில் வந்தவரும் தம்முள் திருமணம் கொள்ளலாயினர். சாளுக்கிய அரச பரம்பரையில் வந்த இராசராச நரேந்திரன் (கி.பி.1022-1061)

1. A. M. Paramasivanandam; Tamilnadu Through Ages; 1960; p. 80.
2. K.A. Neelakanda Sastry; The Culture and History of the Tamils 1963; p. 28.

கங்கைகொண்ட சோழ அரசனான முதலாம் இராசேந்திர னுடைய மகளாகிய அம்மங்கதேவியை மணந்தான். இந்த இராசராச நரேந்திரன் காலமுதற் கொண்டே தெலுங்கு இலக்கிய வரலாறு தொடங்குகின்றது. தெலுங்கு இலக்கியங் களுள் தொன்மையான நூலாக விளங்கும் பாரதத்தை இயற்றிய நன்னயர் இவ்வரசன் காலத்தவரேயாவார். இவரே 'பிரதமா சாரியர்' (முதலாசிரியர்) என்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் பெருமைக்குரியராவார்.

இராசராச நரேந்திரனுடைய மகன், தாய்வழியில் கங்கை கொண்ட சோழனது பெயரன். இவனையே இரண்டாம் இராசேந்திரன் என்று அழைப்பர். இவ்விரண்டாம் இராசேந்திரன் சோழ நாட்டில் வளர்ந்து வந்தான். 'இளமைப் பருவத்தில் அங்கு வளர்ந்து வந்தமையாலும் தமிழ் மொழியையே தாய் மொழியாகக் கொண்டு பயின்று தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டமையாலும் இவன், தன்னைச் சோழ அரச குமாரனாகவே கருதிவிட்டான். அவ்வெண்ணமும் இவன் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது.'[3] அக்காலத்தில் சோழ நாட்டில் அரசுரிமை பற்றிய குழப்பம் ஏற்படலாயிற்று. இச்சாளுக்கிய இளவரசனான இரண்டாம் இராசேந்திரன் அரசனானான். அது முதல் இவனே முதற் குலோத்துங்க சோழன் என்று அழைக்கப்படலானான். இதன் விளைவாகச் சோழநாடும் வேங்கிநாடும் இணைந்தமைந்தன. வேங்கிநாடு சோழநாட்டின் ஒரு பகுதியாக அமைந்தது. இதன் காரண மாகத் தெலுங்கு நாட்டின் பகுதிகள் தமிழ்நாட்டின் ஆட்சிக்குட் பட்டவையாயின.

குலோத்துங்க சோழன் தந்தை வழியால் திங்கள் மரபினைச் சார்ந்த சாளுக்கியனாகவும் தாய்வழியால் செங்கதிர் மரபினைச் சார்ந்த சோழனாகவும் விளங்கினான் என்பதை,

> **"திங்களினிளங் குழவி செம்மலிவ னென்றும்**
> **செய்ய பருதிக் குழவியை யணிவனிவனென்றும்**
> **தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்**
> **தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே"**

என்று நடக்கும் கலிங்கத்துப் பரணி அடிகளால் அறியலாம்.[4]

---

3. தி.வை. சதாசிவ பண்டாரத்தார்; பிற்காலச் சோழர் வரலாறு-2; 1954; ப. 1.
4. கலிங்கத்துப் பரணி 238.

குலோத்துங்க சோழனுடைய ஆட்சிக்குட்பட்டுத் திறை செலுத்தி வந்தவன் கலிங்க நாட்டரசன். இவனை அனந்த வர்மன் எனவும், அனந்தவர்மன் சோட(ழ)கங்கன் எனவும் குறிப்பர்.[5] இவ்வனந்த வர்ம சோட(ழ)கங்கன் முதற்குலோத் துங்க சோழனுக்குத் திரையிறுக்க மறுத்தான். குலோத்துங்கன் படை கருணாகரத் தொண்டைமான் தலைமையில் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தது. குலோத்துங்கன் கலிங்கத்தை வென்றான். இந்த வெற்றியைச் சிறப்பித்துப் பாடும் வண்ணம் எழுந்ததே சயங்கொண்டார் இயற்றியருளிய கலிங்கத்துப்பரணி. குலோத்துங்கனுடைய ஆட்சிக் காலத்தில் அவன் கீழ் அடங்கி யிருந்தவராகப் பொத்தப்பிக் காமதேவ சோட மகாராஜன், மகாமண்டலேசுவரன் சூர்ப்பராசன் என்போர் குறிப்பிடப்படு கின்றனர். பொத்தப்பி என்பது கடப்பை மாவட்டத்திலுள்ள ஊர். அவ்வூரைச் சூழ்ந்த நிலப்பரப்பினைப் பொத்தப்பி நாடு என்று அழைத்தனர். அந்நாட்டினை ஆண்ட அரசர் பொத்தப் பிச் சோடர். சூர்ப்பராசன் வீரகொட்டா என்னும் இடத்தி லிருந்து ஆட்சிபுரிந்து வந்த ஒரு சிற்றரசன். இவ்வரசன் தன்னைக் 'காஞ்சிபுரேசுவரன்' என்று அழைத்துக்கொண்டான்.[6] இவனும் குலோத்துங்கனுக்குத் திறையிறுத்துக் கொண்டுத் தெலுங்கு நாட்டில் ஒருபகுதியை ஆண்டுவந்தவனாகலாம். கோதாவரி மாவட்டத்திலுள்ள திராட்சாராமத்திலுள்ள கல்வெட்டு, இவன் குலோத்துங்க சோழனுக்குக் கீழ்ப்பட்ட ஒரு குறுநில மன்னன் என்பதைக் குறிக்கின்றது.[7]

குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த புலவருள் திருநாராயணபட்டர் என்பவர் ஒருவர் எனவும், அவர் 'குலோத்துங்க சோழ சரிதை' என்னும் நூலினைத் தந்தார் எனவும், அந்நூல் இப்போது கிடைக்கவில்லை எனவும், சதாசிவ பண்டாரத்தார் தம் நூலுள் குறிப்பிட்டுள்ளார்.[8]

குலோத்துங்கனுடைய தந்தையாகிய இராசராச நரேந்திரன் காலத்தில் நன்னயர், தெலுங்கு பாரதத்தினைத் தந்தார் என்கிறோம். நன்னயர் தாம் பாரதநூலை மொழி

---

5. K.A. Neelakanta Sastry; The Colas, 1955; p. 345
6. தி. வை. சதாசிவ பண்டாரத்தார்; முன்சுட்டியது; ப. 69.
7. South Indian Inscriptions-Vol. IV; No. 1327, 405/1893.
8. முன் சுட்டியது; ப. 70.

பெயர்த்துத் தெலுங்கில் அமைத்தபோது தமக்குப் பெரிதும் துணைபுரிந்தவர் நாராயணபட்டு என்று குறிப்பிடு கின்றார். ''கண்ணன் எங்ஙனம் அருச்சுனனுக்குத் துணை புரிந்தானோ அங்ஙனம் நாராயணபட்டு தமக்குத் துணை புரிந்தார்'' என்று நன்னயர் தம் நூலுள் குறிப்பிடுகின்றார்.[9]

நாராயணபட்டு என்னும் இவரைப் பற்றி வேறு விவரம் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், நாராயணபட்டு பாரதத்தினை மொழிபெயர்த்து நன்னயர் பெயரில் வெளி யிட்டார் என்று ஒரு கருத்து கூறப்படுகின்றது. இராசராச நரேந்திரன் காலத்து வாழ்ந்த நன்னயர், நாராயணபட்டு என்போர் இராசராசநரேந்திரனுடைய மகனாகிய முதற் குலோத்துங்க சோழன் காலத்தும் வாழ்ந்திருக்கலாம். முதற் குலோத்துங்கனின் வரலாற்றினை இயற்றியவராகக் கூறப்படும் திருநாராயணன் பட்டருக்கும் நாராயணபட்டுவுக்கும் பெய ரொற்றுமை காணப்படுகின்றது. அப்புலவர் பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. திருநாராயணப்பட்டரும், நாராயண பட்டுவும் ஒருவரே என்று மெய்ப்பிப்பதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை.

குலோத்துங்க சோழன் தன்னுடைய மக்களாகிய இராசராச மும்முடிச் சோழன், வீரசோழன், இராசராச சோழகங்கன், விக்கிரமசோழன் ஆகியோரை ஒருவர்பின் ஒருவராகத் தன் பிரதிநிதிகளாக வேங்கி நாட்டில் இருக்கச் செய்து கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த வண்ணம் தன்னுடைய தந்தை நாட்டை ஆண்டு வந்தான்.

இராசராச மும்முடிச்சோழன் கி.பி. 1077 முதல் கி.பி. 1078 வரை வேங்கியிலிருந்தான். வீரசோழன் கி.பி. 1078 முதல் கி.பி. 1084 வரை வேங்கியிலிருந்தான். இராசராச சோழ கங்கனோ கி.பி. 1084 முதல் கி.பி. 1089 வரை வேங்கியரச னாக அமைந்தான். கி.பி. 1089 முதல் கி.பி. 1093 வரை வீரசோழன் மீண்டும் வேங்கியின் தலைமையை ஏற்று அரசு நடத்தினான்.

''இவர்களுக்குப் பின்னர் கி.பி. 1093-ல் விக்கிரம சோழன் வேங்கி நாட்டுத் தலைமை ஏற்றான். இவ்வாறு குலோத்துங்கன் தன் புதல்வர் பலரையும் வேங்கி நாட்டிற்குத் தன் பிரிதிநிதி

---

9. ஆந்திர மஹா பாரதமு......உற்பலமாலா-25

களாக அனுப்பியமைக்குக் காரணம் அவர்கள் எல்லோரும் அச்சிறப்பினைச் சமமாகப் பெறுதல் வேண்டும் என்பதே''.[10]

முதற் குலோத்துங்க சோழன் முதுமையடைந்தமையை எண்ணித் தன்னுடைய புதல்வனான விக்கிரம சோழனை வேங்கி நாட்டிலிருந்து வரவழைத்துக் கங்கை கொண்ட சோழ புரத்தில் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். வேங்கி நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. சோழ நாட்டிலிருந்து யாரும் வேங்கி நாட்டின் தலைவனாகச் செய்யப்படவில்லை. தெலுங்குச் சோழருள் ஒருவனான சோடன் என்பவனைக் குலோத்துங்கன் வேங்கி நாட்டுத் தலைவனாக நியமித்தான்.

முதற் குலோத்துங்க சோழனுக்குப் பிறகு விக்கிரம சோழன் பட்டத்திற்கு வந்தான். இவனுக்குப் பின்னர் இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான். இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு இரண்டாம் இராசராசன் பட்டத் திற்கு வந்தான். விக்கிரம சோழன், இரண்டாம் குலோத் துங்கன், இரண்டாம் இராசராசன் என்னும் மூவரையும் பற்றியதே கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலா. இவ்வரசர் அனைவரும் தெலுங்கு நாட்டின் பகுதி களையும் ஆண்டு வந்தனர்.

விக்கிரம சோழனது மெய்க்கீர்த்திகளில் அவன் தெலுங்கர், கன்னடர் முதலியோரை வென்ற செய்திகள் காணப்படுகின்றன. பொத்தப்பி நாட்டுச் சோட(ழ)ர்களான பெத்தராசன், விமலாதித்தன் ஆகிய இருவரும் விக்கிரம சோழன் காலத்தில் விக்கிரமனுக்குத் திறையிறுத்துச் கொண்டுத் தெலுங்கு நாட்டில் ஆட்சி புரிந்திருந்தவர் என்பதை நந்தலூர், திருக்காளத்தி ஆகிய ஊர்களில் காணும் கல்வெட்டுக்களால் அறியலாம்.

விக்கிரம சோழனுக்குப் பின்னர் கி. பி. 1133 முதல் கி.பி. 1150 வரை அரசாண்ட இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அவனுக்குத் திறை செலுத்திவந்த தெலுங்குச் சிற்றரசர்களாக, மகாமண்டலேசுவரன் பல்லய சோடமகராசன், வெலநாண்டி குலோத்துங்க சோட கொங்கராசன், திரிபுவன மல்ல சோடமகாராசன், மகா மண்டலேசுவரன் வீமநாயகன் பண்டராசன், கந்தரவடி வீமராசன் என்போர் குறிக்கப்படு கின்றனர். இவர்கள் தத்தம் நாடுகளில் தாம் தாம் புரிந்த

---

10. தி. வை. சதாசிவ பண்டாரத்தார்; முன்சுட்டியது; ப. 35.

அறச்செயல்களைக் குறித்து வைத்த கல்வெட்டுக்களில் இக்குலோத்துங்கன் ஆட்சியாண்டினைக் குறித்துள்ளனர். எனவே, இவரெல்லாம் இவனுக்குக் கீழ்ப்பட்டவர் எனத் துணிகின்றார் சதாசிவ பண்டாரத்தார்.[11]

இரண்டாம் இராசராசன் காலத்தும் மகாமண்டலேசுவரன் திரிபுவன மல்ல தேவசோட மகாராசன், மகாமண்டலேசுவரன் ஜிக்கி தேவசோட மகாராசன், புத்தராசன், மகாமண்டலேசுவரன், குலோத்துங்க ராசேந்திரசோடன், இராசேந்திரகோன லோகராசன், மகாசம்மந்தன் ஜிய்யருவாரு என்போர் ஆந்திர நாட்டில் சோழ ஆட்சியின் கீழ்ச் சிற்றரசர்களாக அமைந்து ஆண்டு வந்தனர்.

இவருள் மகாமண்டலேசுவரன் திரிபுவன மல்லதேவசோட மகாராஜன் என்பவனும், மகாமண்டலேசுவரன் ஜிக்கி தேவசோட மகாராஜன் என்பவனும் தம்மைக் கரிகாலன் பரம்பரையினர் எனக்கூறிக் கொள்கின்றனர்.[12]

இங்கு, 'குமாரசம்பவம்' என்னும் தெலுங்கு நூலைத் தந்தவனாகிய நன்னெசோடு (கி.பி. 1150–70) தன்னைக் கரிகாலன் பரம்பரையினன் என்று அழைத்துக் கொள்வது குறிக்கத் தக்கது.[13] இவனும் பொத்தப்பி நாட்டினனே.

இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் நெல்லூர்ச் சித்தியரையன் என்பான் சிற்றரசனாக இருந்தான் என்பது திருக்காளத்தியிலுள்ள கல்வெட்டால் விளங்கும். இவன் நெல்லூரில் ஆட்சி புரிந்து வந்தான்.

மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத் தொடக்கத்தில் கடப்பை, நெல்லூர், சித்தூர் மாவட்டங்களில் ஆட்சி புரிந்து வந்த தெலுங்குச் சோழர் சோழ மன்னனுக்குத் திறை செலுத்த மறுத்தனர். பின்னர், பொத்தப்பி, நெல்லூர் ஆகிய ஊர்களிலிருந்து கொண்டு அரசாட்சி செலுத்திவந்த குறுநில மன்னர் இவனது ஆணைக்குக் கீழ்படிந்து நடக்கும் வண்ணம் செய்யப்பட்டனர். அத்தெலுங்குச் சிற்றரசருள் மதுராந்தக பொத்தப்பிச் சோழன், அவன் புதல்வன் நல்ல

---

11. மேற்படி ப. 35.
12. மேற்படி ப. 90.
13. குமார சம்பவமு 1:51,52 பிரதமாஸ்வாசமு

சித்தரசன், சோடன் திருக்காளத்தி தேவன் என்போர் குறிப்பிடத்தக்கவர்.

மூன்றாம் இராசராச சோழன் காலத்துச் சிற்றரசராகக் குறிப்பிடப்படுபவர் முதல் திக்கன் என்னும் விசய கண்ட கோபாலன்,சித்தூர் மாவட்டத்துப் புடோலியரசன், வீர நரசிங்க தேவ திருக்காளத்தி தேவனாகிய யாதவராயன் என்போராவர்.

மூன்றாம் இராசராசனைக் கோப்பெருஞ்சிங்க தேவன் என்பவன் சேந்தமங்கலத்தில் சிறை பிடித்தான். திரிசிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த கண்ணனூரில் அப்போது அரசாண்டு வந்த வீரநரசிம்மன் என்னும் மன்னன் இவனைச் சிறைமீட்டு அரச பதவியில் அமர்த்தினான். (வீரநரசிம்மன் இராசராசனுடைய மாமனாராவான்)[14] சோழ மரபின் வீழ்ச்சி மூன்றாம் இராசராசனொடு தொடங்கிவிட்டது.

மூன்றாம் இராசராசனுடைய மகன் மூன்றாம் இராசேந்திரனாவான். இவனுக்குப் பெருந்துணை செய்தவன் திக்க நிருபதி என்னும் கண்டகோபாலன் (தெலுங்குச் சோழன்) தெலுங்கு பாரதத்தினை நன்னயருக்குப் பிறகு தொடர்ந்து எழுதிய திக்கனர் தாமியற்றிய 'நிர்வசனோத்தர ராமாயணத்தில்' திக்க நிருபதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இத்திக்க நிருபதி சோழ அரசருக்கு உதவி புரிந்ததனால் "சோழ ஸ்தாபனாசாரியன்", என்னும் பட்டத்தினைப் பெற்றான்.[15]

மூன்றாம் இராசேந்திரனுக்குப் பின்னர் சோழ அரசு வீழ்ச்சியடையலாயிற்று. சோழப் பேரரசின் பகுதிகளுள் ஒன்றாயிருந்த தொண்டை மண்டலத்தைச் சோழ அரசரிடம் அலுவலராயிருந்த சம்புவராயர் கைப்பற்றிக் கொண்டு ஆட்சி செய்யலாயினர்.

சடையவர்மன் சுந்தர பாண்டியன் காரணமாகப் பாண்டியர் எழுச்சியுற்றனர். "எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்" எனப் போற்றப்படும் இவனுடைய கல்வெட்டுக்கள் நெல்லூர், கடப்பை மாவட்டங்களில் காணப்படுகின்றன. சடையவர்மன் சுந்தர பாண்டியன் காஞ்சியின் மீது படையெடுத்துச் சென்று, அங்கு ஆட்சி புரிந்துவந்த கண்ட

14. K.A. Neelakanta Sastry: The Colas: 1955; p. 3.
15. Ibid; p. 200.

கோபாலன் என்னும் தெலுங்குச் சோழனை வென்றான். காஞ்சியைத் தன்னாட்சிக்குள் கொணர்ந்த பின்னர் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்றான். அக்காலத்தில் காகதீய அரசனாக ஆண்டு வந்த கணபதியைப் புறங்கண்டான். நெல்லூரினைக் கைப்பற்றினான். அவ்வூரிலேயே வீராபிடேகம் செய்து கொண்டான்.

இச் சடையவர்மன் சுந்தர பாண்டியன் வழியில் வந்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பவன் பெருவீரனாகப் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான் (கி.பி. 1268). இவன் செய்த தவறு தமிழ் நாட்டினைப் பிற மொழியாளருக்கும் பிறமதத்தாருக்கும் அடிமைப்படுத்திவிட்டது. அரசுரிமைக்குரியவனான தன் மகன் சுந்தர பாண்டியனை அரியணையில் அமர்த்தாமல், மாறவர்மன் குலசேகர பாண்டியன் தன்னுடைய காமக் கிழத்தியின் மகனாகிய வீரபாண்டியனுக்கு முடி சூட்டினான்.

வீரபாண்டியனுக்கு முடி சூட்டியது முதல் பாண்டிய நாட்டில் உள்நாட்டுப் போர்கள் நடைபெறலாயின. சுந்தர பாண்டியனும் வீரபாண்டியனும் போர்புரிந்த வண்ணமிருந்தனர். இங்ஙனம், நிகழ்ந்த அரசுரிமைப் போர்களில் சுந்தர பாண்டியன் காரணமாக அயல் நாட்டினர் தமிழ்நாட்டிற்குள் நுழையலாயினர்.

இக்காலத்தில் தான் முகம்மது பின் துக்ளக் போசள இராச்சியத்தின் மீது படையெடுத்து மூன்றாம் வள்ளாளனை (Battala III) வென்றான். சுந்தரபாண்டியன் முகம்மதியரின் துணையை வேண்டினான். மாலிக்காபூர் தெற்கு நோக்கிப் படையுடன் வந்தான். மாலிக்காபூருக்குச் சுந்தர பாண்டியனைப் பற்றியோ வீரபாண்டியனைப் பற்றியோ கவலையில்லை. மதுரையின் மீது படையெடுத்தான். கோயில்களைச் சூறையாடினான்; நகரங்களில் புகுந்து கொள்ளையடித்தான். தில்லிக்குத் திரும்பும் போது அறுநூறு யானைகளையும், தொன்னூற்றாறு மணங்கு பொன்னையும், பல பெட்டிகளில் முத்தையும் அணிவகைகளையும், இருபதினாயிரம் குதிரைகளையும் தன்னுடன் கொண்டு சென்றான்.[16]

---

16. K.A. Neelakanta Sastry; The Culture and History of the Tamils; p. 34.

பின்னர், சுந்தர பாண்டியன் காகதீய அரசனான இரண்டாம் பிரதாபருத்திரனிடம் உதவி வேண்டினான். பிரதாப ருத்திரன் தெல்லூர்ச் சிற்றரசனாகிய முப்பிடி நாயகன் தலைமையில் பெரும் படையினை அனுப்பினான். அவன் வீர பாண்டியனையும், அப்பாண்டியனுக்குத் துணையாய் நின்ற இரவிவர்மன் குலசேகரனையும் விரட்டி அடித்து விட்டுச் சுந்தர பாண்டியனை அரியணையில் அமர்த்தினான்.

மாலிக்காபூருக்குப் பின்னர் முஸ்லீம்கள் பலரும் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். துக்ளக்கின் காலத்தில் மதுரை, தில்லி முஸ்லீம் அரசுக்கு உட்பட்ட மாநிலம் போல் அமைந்துவிட்டது. மதுரையில் தில்லி அரசின் பிரதிநிதியாக ஜலாலுதீன் அசன்ஷா ஆட்சி புரிந்தான். இவன், மதுரையைத் தில்லியுடன் தொடர்பில்லாத விடுதலை அரசாக மாற்றிக் கொண்டான். ஜலாலுதீன் கொல்லப்பட்டான். அவனுடைய மருமகன் கியாசுதீன் அரசனாயினான். பின்னர், நசீருதினும் அவனுக்குப் பின்னர் அடில்ஷாவும் அரசராயினர். பக்ருதீன் முபாரக்ஷா, அலாவுதீன் சிக்கந்தர் ஷா என்போர் அடுத்தடுத்து அரசராகி மதுரையை ஆட்சி புரியலாயினர்.

மதுரை சுல்தான்களின் ஆட்சி நீண்டகாலம் நிலைக்க வில்லை. முஸ்லீம்களின் எழுச்சியைத் தடுத்து நிறுத்தவும், இந்து மதத்தினை நிலை நிறுத்தவும் வித்தியாரணியர் என்பாருடைய துணையுடன் ஹரிஹரர், புக்கர் என்போர் விசயநகரப் பேரரசுக்கு வித்திட்டனர். இவ்விசயநகரஅரசு பாமினி சுல்தான்களுடன் தொடர்ந்து போரிட்டவண்ணம் இருந்தது. இப்போர்களுக்குக் காரணம் முஸ்லீம்களின் ஆட்சி, தெலுங்கு, கன்னடப்பகுதிகளடங்கிய தெக்கணத்தில் விரிந்து பரவத் தொடங்கியதேயாகும். விசய நகரப் பேரரசே முஸ்லீம்களின் எழுச்சியைத் தடுத்து நிறுத்தியது.

அவ்வரசே, மதுரையில் ஏறக்குறைய ஐம்பதாண்டுக்காலம் ஆட்சி செலுத்திய முஸ்லீம் சுல்தான்களின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது. கி.பி. ஆயிரத்து முந்நூற்று எழுபதில் குமார கம்பனர் மதுரையில் முஸ்லீம் ஆட்சியை அகற்றினார்; இந்துக்கள் ஆட்சியை நிறுவினார்.[17]

---

17. Administration and Social Life under Vijayanagar pp. 300-301.

பாண்டிய மரபினைச் சேர்ந்தோர் தம் ஆட்சி திருநெல்வேலி, தென்காசி ஆகிய இடங்களில் தலையெடுத்தது. இவர்கள் நெல்லைப் பாண்டியர் எனவும் தென்காசிப் பாண்டியர் எனவும் அழைக்கப்பட்டனர். ஆனால், இப்பாண்டியர்கள் விசயநகர வேந்தர்க்கு அடங்கியே வாழ்ந்து வந்தனர்.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், அழகன் பராக்கிரமன், சடையவர்மன் ஸ்ரீவல்லபன் முதலியோர் அரசராகவும் பராக்கிரம குலசேகரன் நெல்வேலிமாறன், சடையவர்மன் அதிவீரராமன், வரதுங்கராமன் என்போர் சிற்றரசாகவும் சிறுநிலப்பகுதிகளை ஆண்டுவந்தனர்.

விசயநகரப் பேரரசின் பிரதிநிதிகள் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களிலிருந்து தமிழ்நாட்டினை ஆட்சி செய்து வந்தனர்.

வீரசேகரன் என்னும் சோழன் சந்திரசேகர பாண்டியனைப் போரில் வென்றான். தோற்றோடிய பாண்டியன் விசயநகர வேந்தராகிய கிருஷ்ண தேவராயரிடம் சென்று முறையிட்டான். கிருஷ்ண தேவராயர், பாண்டியனுக்கு ஆட்சியைமீட்டுக் கொடுக்கும்படி நாகம நாயக்கனைப்பணித்தார். நாகம நாயக்கன் படையெடுத்துச்சென்று வீரசேகரனை வென்றான். ஆனால், கிருஷ்ண தேவராயரின் கட்டளைக்கேற்ப அரசினைப் பாண்டியனுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை. மாறாக, தானே அரசனாகிப் பாண்டியனுடைய நாட்டை ஆட்சி புரியலானான். இதனை அறிந்த விசயநகர வேந்தர்சீற்றம் கொண்டு நாகம நாயக்கனின் புதல்வரான விசுவநாத நாயக்கனை மதுரைக்கு அனுப்பினார். தந்தையும் மகனும் போரிட்டனர். மகன் வென்றான்; தந்தையைச் சிறைசெய்து விசயநகரத்துக்கு அழைத்துச் சென்றான். விசுவநாத நாயக்கரைக் கிருஷ்ண தேவராயர் மதுரைக்குத் தலைவராக்கினார். கி.பி. 1559 ஆம் ஆண்டிலிருந்து பாண்டிய நாடு நாயக்கருடைய ஆட்சிக்குட்பட்டது. விசுவநாதர் பாண்டிய நாட்டு மதுரையின் மன்னராக விளங்கினார். கிருஷ்ணதேவராயரின் இசைவுடன் மதுரையை ஆளத் தலைப்பட்டார். தளவாய் அரியநாதர் விசுவநாதருடைய தானைத் தலைவராகவும் அமைச்சராகவும் அமைந்தார். தற்போதைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் மூன்று மாவட்டங்களும் இவருடைய ஆட்சி எல்லைக்குள் அமைந்தன. திருச்சிராப்பள்ளியைத் தஞ்சை நாயக்கரிடமிருந்து பெற்றுத் தம் எல்லையை விரிவாக்கிக் கொண்டார்.

பாண்டிய நாடு விசயநகரப் பேரரசின் கீழ் வருதற்கு முன்னரே தெலுங்கு மக்கள் பலரும் தமிழ்நாட்டில் குடியேறியிருந்தனர். அவருள் சிலர், சிறு சிறு இடங்களைத் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். இவர்களே பாளையக்காரர் எனப்படுவோர். இவர்கள் பாண்டிய அரசர்க்கு அடங்கியும் அடங்காதும் வாழ்ந்து வந்தனர். பாண்டியருடைய வீழ்ச்சிக்குப் பின்னரும் அப்பாளையக்காரர் முன்போலவே திறை செலுத்தாமலும், அரசர்க்குக் கட்டுப்படாமலும் குழப்பம் செய்து வந்தனர். விசுவநாத நாயக்கர் அவர்களை அடக்கி ஒழுங்கு படுத்தினார். தளவாய் அரியநாதரின் கருத்திற்கிசைந்து பாளைய வகுப்பு அமைத்தார். அப்பாளையக்காரரிடமிருந்த பகுதிகள் எழுபத்திரண்டாகப் பிரிக்கப்பட்டன.[18] ஒவ்வொரு பிரிவுக்கும் நாயக்கரே தலைவராக நியமிக்கப்பட்டனர்.

விசுவநாதருக்குப் பின் அவருடைய புதல்வர் குமார கிருஷ்ணப்பநாயக்கர் பட்டத்திற்கு வந்தார். இவர், இலங்கை மீது படையெடுத்துச் சென்று கண்டியை வென்று கண்டியில் தம் மைத்துனராகிய விசயகோபால நாயக்கரைத் தம் பிரதிநிதியாக அமர்த்தினார்.

குமார கிருஷ்ணப்பருக்குப் பிறகு பெரிய வீரப்பர், இரண்டாம் விசுவநாதர் ஆகிய இருவரும் அரசராயினர். அரியநாதர் அரசியற் செயல்களை மேற்கொண்டார். இவ்விருவருக்கும் பின்னர், பெரிய வீரப்பரின் புதல்வரான இலிங்கயன் விசுவப்பன் என்பார் பட்டத்திற்கு வந்தனர். கி.பி. 1600இல் தளவாய் அரியநாத முதலியார் இறந்தார். அவர் வாழ்ந்த வரை நாயக்கர் ஆட்சி நல்ல முறையில் நடைபெற்று வந்தது.

இலிங்கயனும் விசுவப்பனும் இறந்த பின்னர் இலிங்கயனுடைய புதல்வர் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் பட்டத்திற்கு வந்தார். இராமேசுவரத்திலும் அதற்கு அருகிலுள்ள கடற்கரைப் பகுதிகளிலும் மறவர் குடியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய தலைவர் சேதுபதி எனப்படுவார். இவர்களும் பாளையக்காரரைப் போலவே பாண்டியருக்குத் திறை செலுத்தியும் செலுத்தாமலும் யாருக்கும் கட்டுப்படாமல் வாழ்ந்து வந்தனர். இவர்களை முத்துக்கிருஷ்ணப்பர் அடக்கினார். மோகலூரில் சிற்றரசராக இருந்த சடையத்தேவன் உடையாரை

18. R. Satyanathaiyar; History of the Nayaks of Madurai; 1924; p. 58.

முதல் சேதுபதியாக்கி அவரையே பாளையக்காரர் அனைவருக்கும் தலைவராக்கினார்.[19]

முத்துக்கிருஷ்ணப்பருக்குப் பிறகு அவருடைய மூத்த புதல்வர் முத்து வீரப்பர் பட்டத்திற்கு வந்தார். இவர் காலத்தில் கிறித்துவ சமயம் தென்னாட்டில் பரவியது. இராபர்ட்-டி-நொபிள் என்பார் இவர் காலத்தில் தமிழ்நாட்டிற்கு வந்தார்.

முத்துவீரப்பருடைய தம்பியே திருமலைநாயக்கராவார். குமரகுருபரர் போன்ற புலவர் பெருமக்களுக்குப் புரவலராக அமைந்த கலையார்வம் மிக்க அரசராகத் திருமலைநாயக்கர் விளங்கினார். தஞ்சைநாயக்கர் பரம்பரை செவ்வப்ப நாயக்கருடன் தொடங்குகிறது. விருத்தாசலம், காஞ்சிபுரம் கோயில் பிரகாரச் சுவர்களைக் கட்டும் திருப்பணியை இயற்றிய இவரே பௌத்த பள்ளிக்கும், முஸ்லீம்களின் மசூதிக்கும் தானங்கள் வழங்கினார். சென்னப்ப நாயக்கரின் மகன் அச்சுதப்ப நாயக்கர் கி.பி. 1580 இல் பட்டத்திற்கு வந்தார். மதுரை வீரப்ப நாயக்கர் சுதந்திர அரசராகத் தம்மை மாற்றிக் கொள்ள முயன்றபோது அவரை அடக்கி ஆள விசயநகர வேங்கடபதிராயருக்கு இவர் துணை செய்தார். கோல்கொண்டா சுல்தானுக்கும் வேங்கடபதிராயருக்கும் நிகழ்ந்த போரிலும் அச்சுதப்ப நாயக்கரின் புதல்வர் இரகுநாத நாயக்கர் பேருதவி புரிந்தார். திருவண்ணாமலை, திருவையாறு, திருவிடைமருதூர், மாயூரம், குடந்தை, திருவரங்கம் என்னும் கோயில் திருப்பணிகள் சிறப்புற நிகழ்ந்தன. இரகுநாதநாயக்கர் பெரும்புலவர் புரவலருமாவார்.[20] இரகுநாதநாயக்கரின் புதல்வரான விசயராகவ நாயக்கரே தஞ்சை நாயக்கர் மரபில் வந்த கடைசி அரசர். விசயநகரச் சக்கரவர்த்தியாகிய மூன்றாம் ஸ்ரீரங்கரைப் பகைத்துக் கொண்டார். கி.பி. 1646 இல் முஸ்லீம் படையெடுப்பின்போது முஸ்லீம்களிடம் தோற்றார். மீண்டும் தஞ்சையைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினார். மதுரையை ஆண்டுவந்த சொக்கநாதர் கி.பி. 1673 இல் இவர் மீது தொடுத்த போரில் இறந்து போனார்.

தெலுங்கு நாட்டில் விசயநகர ஆட்சிக் காலத்தில் நிலவிய அரசியல் நிலைகளை நோக்குவோம். இரண்டாவது பிரதாப

---

19. Ibid; p. 92.
20. V. Viruddhagirisan; The Nayaks of Tanjore; 1942; p. 62.

ருத்திரனைத் தில்லி அரசன் கைக்கொண்டான். அட்டங்கி என்னும் இடத்தினைத் தலைநகராகக் கொண்டு வேமாரெட்டி, இரெட்டி அரசினை நிறுவினான். இவன் காலத்தில் வாழ்ந்தவரே எர்ர பிரகதர் என்னும் புலவர். இவர் வேமாரெட்டியின் அவைக்களப் புலவராய் வீற்றிருந்தார்.[21]

வேமாரெட்டிக்குப் பிறகு அவன் மகன் அனபோதன் ஆட்சிக்கு வந்தான். அனபோதனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவன் தம்பியாகிய அனவேமன். இரெட்டி அரசர் தலைநகர் கொண்டவீடு என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டது. அனபோதனுடைய மகனாகிய குமாரகிரி, அனவேமனிடமிருந்து பல்நாடும் வேங்கிநாடும் சேர்ந்த நிலப்பகுதியைக் கேட்டுப் பெற்று ஆளலாயினான். வேங்கியில் இரெட்டி அரசரின் பிரதிநிதியாகக் காத்திய வேமன் என்னும் அமைச்சன் நியமிக்கப் பட்டான்.

இவ்வாறு வளர்ந்த இரெட்டி பரம்பரையினைச் சேர்ந்தவருள் புலமை சான்றவராக விளங்கியவர் பெத்தகோமடி ரெட்டியும் அவனுடைய மகன் இராசவேமனும், வீரபத்திர ரெட்டியுமாவார். ஸ்ரீநாதர் என்னும் பெரும்புலவர் இரெட்டி அரசின் சார்பாகச் சங்கம மரபினைச் சார்ந்த இரண்டாவது தேவராயன் அவைக்குச் சென்றார். அந்த நாட்டு அவைக் களப் புலவராகிய திண்டிமக்கவியை வென்றார். அரசர் ஸ்ரீநாதருக்குக் கனகாபிடேகம் செய்தார்.[22] இரெட்டி பாரதம் என்று அழைக்கப்படும் 'பல்நாடி வீர சரித்திரம்' ஸ்ரீநாதரால் இயற்றப்பட்டது. கி.பி. 1427 இற்குப் பின்னர் இரெட்டியார் அரசு விசயநகரத்துடன் ஒன்றிவிட்டது.

காகதீய அரச மரபினைச் சேர்ந்த தலைவருள் சிலர் வரங்கல் (வாரங்கல், ஓரங்கல், ஒரங்கல், ஒருகல் ஏகசிலா நகரம்) என்னும் நகருக்கருகில் சிறிய அரசுகளை நிறுவி ஆண்டு வந்தனர். இவர்கள் பதுமநாயக்கர் என்று அழைக்கப்பட்டனர். இவருள்ளும் ஒருவன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக விளங்கினான். சர்வஞான சிங்கன பூபாலன் என்னும் இவனுடைய அவையிலும் ஸ்ரீநாதர் தொடர்பு கொண்டிருந்தார். பாகவதத்தினைப் பாடிய பொம்மர போதனா தம்முடைய நூலை

---

21. Vijayanagara Sixth Centenary Commemoration Volume 1936; 54.
22. N. Somasekara Sarma; History of Reddykingdoms 1948; p. 40.

இவனுக்குக் காணிக்கையாக்கவில்லை. பூபாலன், பொம்மர போதனாவைத் தண்டித்தான்.

விசயநகர அரச பரம்பரைகளுள் முதலாவதாகக் கொள்ளப் படுவது சங்கமப் பரம்பரையாகும். இப்பரம்பரையினர் கன்னடத்தினைப் போற்றிய அளவுக்குத் தெலுங்கினைப் போற்றவில்லை என்பர். எனினும், நாச்சன சோமர் ஜக்கனா போன்ற புலவர், இவர்கள் காலத்து வாழ்ந்து நூலியற்றி இலக்கியங்களைத் தந்து மொழிக்கு உரமூட்டி வந்தனர். ஜக்கனா தம்முடைய நூலை முதல் தேவராயரின் அமைச்சரான சித்தனருக்குக் காணிக்கையாக்கினார்.

இரண்டாவது தேவராயர் அவையில் ஸ்ரீநாதர் மேலே கண்ட வண்ணம் கனகாபிடேகம் செய்யப்பட்டார். அடுத்து வந்த அரசர் சாளுவப் பரம்பரையினர். அந்தப் பரம்பரையில் சிறந்து விளங்கிய சாளுவ நரசிம்மன் என்னும் அரசன் தெலுங்கு மொழியிலும் வடமொழியிலும் வல்லவனாக விளங்கினான். பெரும்புலவர் தாங்கள் இயற்றிய நூல்களை இவனுக்குக் காணிக்கையாக்கினர். துளுவ பரம்பரையினர் ஆட்சியிலும் அதனையொட்டியெழுந்த ஆரவீடு பரம்பரையினர் ஆட்சியிலும் தெலுங்கு மொழியும் இலக்கியமும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இக்காலமே தெலுங்கிலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப்போற்றப்படுகின்றது. துளுவ பரம்பரையினைச் சேர்ந்தவரே கிருஷ்ணதேவராயர். ஆரவீடு பரம்பரையில் தெலுங்கினைப் புரந்த புரவலர் இராமராயர் ஆவார்.

தஞ்சை நாயக்கர் காலத்தில் தஞ்சையில் தோன்றிய புதிய தெலுங்கிலக்கியங்களும் மதுரை நாயக்கர் காலத்தில் மதுரையில் தோன்றிய தெலுங்கு இலக்கியங்களும் தெற்குத்தெலுங்கு இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

அரசியல் நிகழ்ச்சிகள் காரணமாக ஏற்பட்ட தமிழர்—தெலுங்கர் தொடர்புகள் எவ்வெவ்வாறு தமிழிலும் (மொழியிலும் இலக்கியத்திலும்) தெலுங்கிலும் காணப்படுகின்றன என்பவற்றை அடுத்துக் காணலாம்.

இலக்கியம்

'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்க் கூறு நல்லுலகத்து' என்னும் பனம்பாரனாரின் பாடலடிகள் தமிழ் நாட்டு வடவெல்லையாக அமைந்திருந்தது திருவேங்கடம் என்பதை அறிவிக்கும். இவ்வேங்கட மலைக்கு அப்பால் இருந்த நாடு யாது? அந்நாட்டில் வழங்கிய மொழி யாது?

'வட திசை மருங்கின் வடுகு வரம்பாக' என்றார் காக்கை பாடினியார். 'வடவடுகர் வாளோட்டிய' என்பது புறநானூற்றில் (378) காணப்படும் தொடராகும்.

''ஓங்கு வெள்ளருவி வேங்கடத் தும்பர்...
வானிணைப் புகவின் வடுகர் தேஎத்து'' **(அகம்: 213)**

என்னும் அகநானூற்றுப் பாடலடிகளும்,

''புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்று நிலைவடுகர்
பிழியார் மகிழார் கலிசிறந்தார்க்கும்
மொழிபெயர் தேஎய மிறந்தன ராயினும்'' **(அகம். 295)**

என்று நடக்கும் அகநானூற்றுப் பாடலடிகளும் தமிழ் நாட்டு எல்லையாகிய திருவேங்கடத்திற்கு அப்பால் வேற்றுமொழி வழங்கியது என்பதையும் அம்மொழியாளர் 'வடுகர்' எனத் தமிழரால் குறிக்கப்பட்டனர் என்பதையும் எடுத்துக் காட்டுவனவாம். 'வடுகர்' என்பது தெலுங்கரையே குறிக்கும் என்பர் மு. இராகவையங்கார்[1]. வடுகர் என்னுஞ் சொல் தமிழ் நாட்டிற்கு வடக்கே வாழ்ந்தவர்களைக் குறிப்பதாகும். அக்காலத்தில் தெலுங்கும் கன்னடமும் வெவ்வேறாகப் பிரித்துணரப்

1. ஆராய்ச்சித் தொகுதி; ப. 317

படவில்லை. எனவே, வடுகர் என்பது தமிழினும் வேறாக அமைந்த மொழியைப் பேசிக் கொண்டுத் தமிழகத்தின் வடக்கு எல்லையில் வாழ்ந்தவர்களைக் குறிக்கத் தமிழர்களால் வழங்கப் பட்ட சொல் என்றறியப்பட வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

''கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்'' **(25: 156)**

எனவும்,

''கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும்'' **(26: 106)**

எனவும் பாடுகின்ற பாடலடிகளில் காணும் 'கருநாடர்' என்னுஞ் சொல் கன்னட மக்களைக் குறிப்பதாகும்.

பிற்காலத்தில் கன்னட மக்களும் தெலுங்கு மக்களும் தனித்தனியாகக் குறிக்கப்பட்டனர். முதற் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கலிங்கப் போரின் சிறப்பினையும் கருணாகரத் தொண்டைமானின் வீரத்தினையும் எடுத்துக் காட்டும் கலிங்கத்துப் பரணியில் கவிச்சக்கரவர்த்தி சயங் கொண்டார்,

'மழலைக் குறுமொழியிற் சில வடுகும் பலதமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக் கடைதிறமின்' **(43)**

என்று பாடுகின்றார்.

கருநாடியர் பேசிய மொழி வடுகுந் தமிழுங் கலந்ததாயிருந்தது என்பது சயங்கொண்டார் பாடலால் தெரிய வருகின்றது. எனவே, வடுகும் கருநடமும் வேறு வேறாக இருந்தன என்பது தெரிய வருகிறது.

'சேனைமடி களங்கண்டு திகைத்து நின்றே
தெலுங்கரேம் என்று சில கலிங்கர் தங்கள்
ஆனை மணியினைத் தாளம் பிடித்துக் கும்பிட்டு
அடிப்பாணர் எனப்பிழைத்தார் அநேகர் அங்கே' **(469)**

என்றும் சயங்கொண்டார் பாடுகின்றார்.

'வடுகு' என்று மொழியைக் குறித்த சயங்கொண்டார் 'தெலுங்கர்' என அம் மொழியைப் பேசும் மக்களைக் குறிக்கின்றார் என்று கொண்டால் 'வடுகும்' 'தெலுங்கும்' ஒன்றாகலாம். பிற்காலத்தில்தெலுங்கரையே வடுகர்என்னும் பெயரால் தமிழர்

கள் அழைத்தனர் என்பதும் சயங்கொண்டார் பாடல்களால் விளங்குவதாகும். இதனால் தெலுங்கு, தெலுங்கர் என்னும் சொற்களைத் தமிழர் வழங்கத் தொடங்கிய காலம் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிற்கு முன்னும் பின்னுமாக இருக்கலாம்.

முதற் குலோத்துங்கனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவனுடைய மகனான விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்திகளுள்ளும் இரண்டாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகளுள்ளும் இரண்டாம் இராசராசன் மெய்க்கீர்த்திகளுள்ளும் தெலுங்கரும் கன்னடரும் வேறு வேறாகப் பிரித்துணரப்பட்டனர்.

'தெலுங்க வீமன் விலங்கல் மிசையேறவும்'

'தெலுங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர்
கன்னடர் கடாரர் தென்னர் சேரலர்'

'கங்கர் திறையிடக் கன்னடர் வென்னிட'
'கன்னடரும் காலிங்கரும் தென்னவரும் சிங்களரும்

என்பவை முறையே அம் மெய்க்கீர்த்திகளுள் காணப்படும் கூற்றுக்கள்.

கம்பராமாயணத்துள் பாலகாண்டம் உலாவியற் படலத்துள் காணும் பாடல் (49) தெலுங்கரையும் கருநடரையும் தனித் தனியே பிரித்துணர்த்துகின்றது.

'ஏதியாத வரேழ் திறற் கொங்கணர்
தேரி ராசர் தெலுங்கர் கருநடர்
ஆதிவானங் கலித்தவனி வாழ்
சோதி நீண்முடி மன்னருந் துன்னினார்.

தமிழைத் 'திராவிடம்' என்றும் 'அரவம்' என்றும் தெலுங்குப் புலவர்கள் தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். கிருஷ்ணதேவ ராயர் தம்முடைய ஆமுக்த மாலியதாவில் தமிழ்ப் பெண்களைத் 'திராவிட அங்கநல்' (1:64) என்று குறிப்பிடுகின்றார். கிருஷ்ணதேவராயருக்கு முன்னரே தமிழோடு தொடர்பு கொண்டிருந்த வீரசைவப் புலவரான பால்குரிகி சோமநாதர் தம்முடைய 'விருஷாதிப சதகத்துள் தமிழ் மொழியைத் 'திராவிட பாஷா' (5:56) என்றே குறிப்பிட்டுள்ளார். 'அஷ்ட திக் கஜங்கள்' என்று போற்றப்படும் புலவர் பெருமக்களுள் ஒருவராகக் கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்த புலவர் தூர்ஜடி தாமியற்றிய காளஹஸ்தி மகாத்மியத்துள்

'திராவிட' (4:108) என்றே தமிழைக் குறிப்பிடுகின்றார். இவரே, அதே நூலுள் தமிழை, 'அரவ பாஷை' (3:157) என்றும் குறிப்பிடுகின்றார்.[15]

இவ்வாறெல்லாம் தமிழ்மொழியில் தெலுங்கு, தெலுங்கர் என்பவையும், தெலுங்கு மொழியில் தமிழ், தமிழர் என்பவையும், குறிக்கப்படுமாற்றை அறியலாம்.

இக்காலத்தில் 'அரவம்' என்பது தமிழைக் குறிக்க வழங்கும் சொல்லாக ஆந்திரம், இராயலசீமைப் பகுதிகளில் காணப்படுகிறது. தெலுங்கானா தெலுங்கு மக்கள் தமிழைத் 'தமிழம்' என்று குறிப்பிட்டு வழங்குவதைக் காணலாம்.

'அரவாளு' எனத் தமிழரை ஆந்திரம், இராயலசீமைப் பகுதிகளில் வாழும் தெலுங்கர் அழைக்கின்றனர். தமிழரைத் 'தமிழர்' என்றே தெலுங்கானா தெலுங்கு மக்கள் அழைக்கின்றனர்.

தமிழரும் தெலுங்கரும் தமிழ்நாட்டு எல்லைகளில் ஒருவரோடுடொருவர் உறவு கொண்டு வாழ்ந்திருந்தனர். பல்லவர் காலத்திலோ அவருக்கு முன்னரோ சோழநாட்டுச் சோழ பரம்பரையினருள் ஒரு கிளையினர் தெலுங்கு நாட்டின் தெற்குப் பகுதியினை ஆண்டிருந்தனர். அப்பகுதி'ரே' நாடு எனப்படுவது. கடப்பை மாவட்டத்தினைச் சார்ந்தது. இவர்கள் சோழர்கள் (சோடர்) என்று அழைக்கப்படலாயினர். பிற்காலத்தில் தெலுங்குச் சோழர் என்று அழைக்கப்பட்டோர் இவரே யாவர். பிற்காலச் சோழர் கீழைச் சாளுக்கியருடன் கொண்ட உறவு தெலுங்கு மொழியுடன் தமிழ்மொழி உறவு கொள்ளுவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. காகதீய மன்னர்கள் சைவ சமயத்தினை மேற்கொண்டொழுகினர். அவர்கள் காலத்தில் தென்னாடுடைய சைவம் தெலுங்கு நாட்டில் பரவியது. தெலுங்கு நாட்டில் பசவேசுவரர் வாயிலாகப் பரவிய வீரசைவ சமயத்தின் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டுச் சைவ இலக்கியங்களும் சைவ நாயன்மார் வரலாறுகளும் உதவின.

பால்குரிகி சோமனாதரின் பண்டிதாராத்ய சரித்திரத்திலும் சிவனடியார் வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. இரெட்டியரசர்கள் அவைக்களத்தில் சிறக்க வீற்றிருந்த பெரும்புலவரான ஸ்ரீநாதர் தம்முடைய 'ஹரவிலாசத்துள்' சிறுத்தொண்ட நம்பியின் (சிறுத்தொண்ட நாயனார்) வரலாற்றினைப் போற்றிப்

பாடியுள்ளார். விசயநகர வேந்தர்களில் சிறந்தவரான கிருட்டிணதேவராயர் காலத்தே வைணவ சமயம் தெலுங்கு நாட்டில் கால்கொண்டு பரவலாயிற்று. இவருக்கு முன்னர் திகழ்ந்த சாளுவ நரசிம்மனின் முன்னோரான மங்கிதேவர் திருவரங்கநாதரின் திருவுருவத்தை மீட்டுக் கொணர்ந்து திருவரங்கத்தில் அவர்க்குரிய இடத்தில் எழுந்தருளச் செய்தார்.

ஸ்ரீகாகுளத்தில் கோயில் கொண்டருளிய ஆந்திர மகாவிஷ்ணு என்று போற்றப்படும் தெலுங்கு வல்லபராயர், ஆண்டாளின் வரலாற்றை இயற்றித் தருமாறு தம்மைப் பணித்தார் என்று கிருட்டிணதேவராயர் தாம் இயற்றிய நூலாகிய ஆமுக்த மாலியதாவில் (பீடிகை: 13) பாடுகின்றார். கிருட்டிண தேவராயர் தமிழ்நாட்டைச் சார்ந்த வைணவ அடியாராகிய ஆண்டாளின் வரலாற்றினைப் பாடும் வாயிலாகத் தமிழ் வைணவ அடியாரான பெரியாழ்வாரின் (விஷ்ணு சித்தர்) வரலாற்றினையும் அவர் போற்றிய பக்தி நெறியினையும் எடுத்துக் காட்டுகின்றார். வைணவமே சிறந்த சமயம் என்று நிலைநாட்டிய தமிழ்நாட்டு ஆளவந்தாரின் வரலாற்றினைக் கிருட்டிண தேவராயர் தம் நூலுள் யமுனாச்சாரியர் வரலாறாக விரித்துரைக்கின்றார். மதுரையும் வில்லிபுத்தூரும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் ஆமுக்த மாலியதாவில் போற்றிப் பாடப் படுவதைக் காணலாம். வைணவமே உயர்ந்தது; திருமாலே சிறந்தவர் என்று நிலைநாட்டும் பகுதிகளால் இந்நூல் ஒரு சிறிய விட்டுணு புராணம் போலக் காணப்படுகிறது என்று தெலுங்கிலக்கிய வரலாற்றறிஞர் பேராசிரியர் திவாகர்ல வேங்கடாவதானி குறிப்பிடுகின்றார்.

எட்டுத்திக் கஜங்களுள் ஒருவரான தூர்ஜடி கவி தம்முடைய காளஹஸ்தி மகாத்மியத்துள் நக்கீரர் வரலாற்றினையும் கண்ணப்பர் வரலாற்றினையும் விவரிக்கின்றார். நக்கீரர் வரலாற்றுடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிய செய்திகளையும் சங்கப் பலகையைப் பற்றிய குறிப்பையும் (திரிதி யாஷ் வாசமு **141–147**) காணலாம்.

தெலுங்கு நாட்டு வைணவர்களைத் தொண்டரடிப் பொடியாழ்வார் கதை ஆட்கொண்டது. தெலுங்கில் இக்கதை நாடகமாகப் பல பெயர்களில் வழங்கி வருகின்றது.

தெலுங்கு நாட்டுச் சைவர்களை ஈர்த்த கதை சிறுத் தொண்ட நம்பி (நாயனார்) வரலாறாகக் காணப்படுகிறது.

மல்லிகார்ச்சுன பண்டித்ரால் பதினைந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'சிவதத்துவ சாரமு' என்னும் நூல் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றைப் பாடுகின்றது, எனினும் 'ஸ்ரீயாள சரிதம்' என்னும் தனி நூலாகவும் தோன்றிச் சிறந்தது. பிற்காலத்தில் 'ஸ்ரீயாள சரித்திரம்' யக்ஷகான நாடக மாகவும் உருவாகி மக்களை ஈர்த்தது.

நன்னிசோட தேவர் தமது குமார சம்பவத்தில் திருநீல கண்டரைக் குறிப்பிட்டுள்ளார். அமர புரபு சன்யாசிகவி என்பவர் பதினெட்டாம் நூற்றாண்டில் திருநீலகண்டர் வர லாற்றினை நூலாக எழுதியுள்ளார்.

அச்சுத தேவராயர் காலத்தில் இராமநாதபுரத்தினை ஆண்டுவந்தவர் பெதராமப்பா என்பவர். இவருடைய தம்பி சின்ன ராமப்பா. இவ்விருவரும் தெலுங்கு இலக்கியத்தைப் போற்றிப் புரந்து வந்தனர். சின்னராமப்பா, பச்சகப் புரவு திருவேங்களராஜு என்பவரைக் கொண்டு 'சொக்கநாத சரித்திரம்' என்னும் நூலைத் துவிபத (இரண்டடி) யாப்பில் இயற்றச் செய்தார். 'சொக்கநாத சரித்திரம்' தெலுங்கு மொழியில் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல் களை எடுத்திசைப்பதாகும். இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் இந்நூலுள் ஒன்பது ஆசுவாசங்களில் (பெரும் பகுதிகள்) கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருவிளை யாடலையும் பாடி முடித்தபின் புலவர், இஃது இத்தனையாவது திருவிளையாடல் என்று எண்ணிக் கூறியுள்ளார். இத்திருவிளை யாடல்கள் கிரேதாயுகத்தில் பதினாறும், திரேதாயுகத்தில் பதினாறும், துவாபர யுகத்தில் பதினாறும், கலியுகத்தில் பதினாறுமாக நடைபெற்றன என்பதைச் சிறப்பாகப் பாடி யுள்ளார்.

குலசேகரஆழ்வாரும் தெலுங்கு மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றார் என்பது தெலுங்கு வைணவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் குலசேகர (ராவ்) என்று பெயரிடுவதால் அறியலாகும்.

தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ள நாலாயிரப் பிரபந்த பாடல்களைப் படிப்பதும் தெலுங்கு வைணவர்களிடையே உள்ள வழக்கமாகக் காணப்படுகிறது. ஆண்டாள் இயற்றிய திருப்பாவை (தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ள தமிழ் நூல்) தெலுங்கு வைணவரிடையே பெருவழக்காக விளங்குகின்றது.

இவ்வாறாகத் தெலுங்குப் புலவர்களையும் அவர்கள் வழியாகத் தெலுங்கு மக்களையும் தமிழ்ச் சைவமும் தமிழ்ச் சைவ நூல்களும், தமிழ் வைணவமும், தமிழ் வைணவ நூல்களும் பெரிதும் கவர்ந்து வந்தன.

தமிழில் உள்ள திருக்காளத்திப் புராணத்திற்கு அடிப்படையாய் அமைந்தது, தூர்ஜடி கவியின் காளஹஸ்தி மகாத்மியம் என்று டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் குறிப்பிடுகின்றார்.[1]

தமிழ்நாட்டில் விஜயரகுநாத சேதுபதி (1647—1672) தெலுங்கு மொழியைத் தம் சமஸ்தான ஆட்சி மொழியாக்கினார். சேதுபதி தம்முடைய சமஸ்தான இலச்சினையில் (முகரில்) தெலுங்கு எழுத்துக்களையும் பொறித்தார்.[2]

விஜயரகுநாத சேதுபதியின்மீது அமிர்த கவிராயர் பாடிய 'ஒரு துறைக் கோவை'யுள் புலவர், சேதுபதியைத் 'துரை ரகுநாத கிரீடி' (161) என்றும், 'துரை ரகுநாத'(165) என்றும், 'துரைக்குத் துரை ரகுநாதன்'(268) என்றும் பாடுவதைக் காணலாம், 'துரைத்தனம்' (210) என்னும் சொல்லும் புலவர் நூலுள் காணப்படுகின்றது.

வேமனர்பாடல்களும் தமிழ்மக்களைப் பெரிதும்கவர்ந்தன. வேமனர் பாடல்கள் மிகவும் பிற்காலத்திலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

தியாகராசரின் தெலுங்கிசைப் பாடல்களில் தமிழிசை உலகில் பெருஞ்செல்வாக்குடன் திகழ்கின்றன. தஞ்சைத் திருவாரூரில் தோன்றிய தியாகராசர் பாடிய தெலுங்குமொழி இசைப்பாடல்கள் தமிழிசை அரங்கங்களில் இன்றும் செங்கோலோச்சி வருகின்றன. திருவாரூரில் பிறந்து திருவையாறில் வாழ்ந்திருந்த தியாகராசர் தமிழ்மொழியால் ஈர்க்கப்படாதது வியப்புக்குரியதே!

தெலுங்கிலக்கிய முதலாசிரியராகிய நன்னயர் இயற்றிய பாரதம் முதற்கொண்டு தெலுங்கில் தோன்றிய இலக்கியங்களுள் பெரும்பான்மையும் 'சம்பு' (உரையிடையிட்ட செய்யுள்) யாப்பில் அமைந்தவையே. 'துவிபதம்' என்னும் இரண்டடி

1. திருக்காளத்தி நாதருலா; ப. viii
2. செந்தமிழ் தொகுதி 6, ப. 45.

யாப்பு வகையிலான இலக்கியங்கள் முழுவதும் செய்யுட்களாலானவை. இத்துவிபத யாப்பில் அமைந்த தெலுங்கு நூல்களுள் முதன்மையானது பால்குரிகி சோமநாதர் இயற்றிய பசவ புராணம் ஆகும். அரங்கநாதர் (ரங்கநாதா) இயற்றிய ரங்கநாத ராமாயணம் 'துவிபத' யாப்பில் அமைந்தது. ஸ்ரீநாதர் இயற்றிய பல்நாடி வீரசரித்திரமும் துவிபதத்தில் அமைந்ததேயாகும். திருவேங்களராஜு இயற்றிய சொக்கநாத திருவிளையாடல்-சரித்திரம் துவிபதத்தில் அமைந்ததே.

காளெசர் வெப்ப என்னும் புலவர் இயற்றிய சித்தேஷ்வர சரித்திரம் உரைநடையிலும் துவிபத செய்யுட்களாலும் ஆனது. திக்கனர் இயற்றிய 'நிர்வசனோத் தர ராமாயணம்' செய்யுட்களிடையே உரைநடையின்றி முழுவதும் பாடல்களாலேயே இயன்றது.

உரையாடல் வடிவில் அமைந்தது 'கிரீடா பிராமம்'. இந்நூலை இயற்றியவர் வல்லிபராயர் என்பர். இதனை ஸ்ரீநாதர் இயற்றினார் என்றும் கூறுவர். இந்நூல் வீதி நாடகம் எனப்படும்.

சதகங்கள் அனைத்தும் செய்யுட்களாலானவை. தமிழில் 'சம்பு' காப்பியங்களே இல்லை எனலாம். சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்துள்ளது. 'சம்பு' காவியம் எனக் கூறவியலாது. தெலுங்கு மொழிச் சம்பு காவியங்களில் காணப்பெறும் உரைநடை (வசனம்), வருணனைகளை எடுத்து விரித்துக் கூறுவதற்காகவும் கதையைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்காகவும் செய்யுட்களிடையே பெய்துயாக்கப் பட்டுள்ளது. 'ஆமுக்த மாலியதா'வில் நீண்ட வருணனைகள் உரைநடையில் அமைந்திருக்கக் காணலாம்.

தமிழ் அரிச்சந்திர வெண்பா என்னும் 'சம்பு' காப்பியத்துள்ளும் வசனம், கதையைத் தொடர்ந்து நடத்திச் செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டு: உரைப்பாட்டு..............................

பெருநடஞ் செய் பெண் கொடுப்ப பெற்று
நின்ற அரிச்சந்திரன்.

வசனம்: மற்றது யாது செய்தானோ வெனில்

செய்யுள்: நீலியை அங்கே விடைகொண்டு நீர்நுகரும்
காலியை மூசும் களிவண்டு—சாலவே

தென்னோசி பாடிச் சிறக்குஞ் செழுந்தடஞ்சேர்
சன்னோசி நாடணைந்தான் கண்டு.

நூலின் 10, 11, 12, 13 எண்ணுள்ள வெண்பாக்களிடையே 'அன்றியும்' என்னும் வசனம் தனிச்சொல் போல அமைந்துள்ளது. நீண்ட இரண்டு உரைப்பாட்டுகளுக்கிடையே ''இப்பால் விசிட்டன் யாது செய்தான்'' (106) என்று வசனம் நடக்கின்றது.

தெலுங்கு மொழிச் சம்பு காப்பியங்களில் வசனப் பகுதிக்கும் தொடர் எண் உண்டு. தமிழ் அரிச்சந்திர வெண்பாவில் காணும் வசனப்பகுதிக்குத் தொடர் எண் இல்லை. வசனம் எந்தச் செய்யுளைத் தொடர்ந்து அமைந்துள்ளதோ அந்தச் செய்யுளுக்கே தொடர் எண் உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிரபந்தம்

'பிரபந்தம்' என்னும் வடமொழிச் சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். தமிழில் 'பிரபந்தம்' என்னும் சொல் சிற்றிலக்கியத்தினைக் குறிக்க வழங்கப்படுகிறது. பிரபந்தம் என்னும் சொல்லால் சிற்றிலக்கியங்களைக் குறிக்கும் வழக்கும் மிகவும் பிற்காலத்தியதே எனலாம். பிரபந்தம் என்னும் சொல் பக்திச்சுவையோடு அமைந்த நூல்களைக் குறிக்கவும் வழங்கப்பட்டுள்ளது. வைணவ சமய நூல்களுள் சிறந்தவை பிரபந்தங்கள் என்றே போற்றப்படுகின்றன. ஆழ்வார்கள் பாடியருளிய பாசுரங்களின் தொகுதி 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்று அழைக்கப்படுகின்றது. வேதாந்த தேசிகர் இயற்றிய சிறு நூல்களின் தொகுதி 'தேசிகப் பிரபந்தம்' என்று பெயர் சூட்டப்பெற்றது. 'ஆர்த்திப் பிரபந்தம்' என்னும் அறுபது பாடல்கள் கொண்ட நூலை இயற்றியவர் மணவாள மாமுனிகள் ஆவார். பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய சிற்றிலக்கியத் தொகுதி 'அஷ்டப் பிரபந்தம்' என்று வழங்குகின்றது.

சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களைக் கூறும் பாட்டியல் நூல்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து எழலாயின. பாட்டியல் நூல்களுள் பழமையானதாக விளங்கும் பன்னிரு பாட்டியல் அறுபத்தொரு சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களை வகுத்துரைக்கின்றது. இந்நூலுக்குச் சற்றுக் காலத்தால் பிந்தியதாகக் கருதப்படும் வெண்பாப் பாட்டியல் குணவீர பண்டிதரால் இயற்றப்பட்டது. குணவீர பண்டிதர் தமது

நூலுள் ஐம்பத்தைந்து சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களைக் கூறியுள்ளார். கி. பி. பதினான்காம் நூற்றாண்டினராகக் கருதப்படும் நவநீத நடர் தமது நவநீதப் பாட்டியலுள் நாற்பத்து நான்கு சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களை உணர்த்தியுள்ளார். கி. பி. பதினாறாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் பரஞ்சோதியார் தமது சிதம்பரப் பாட்டியலுள் அறுபத்து மூன்று சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களைக் கூறியுள்ளார்.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் எழுந்த இலக்கண விளக்கத்தோடு அமைந்த இலக்கண விளக்கப் பாட்டியல், அறுபத்து மூன்று சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்களைக் (433) கூறுகின்றது. இப்பாட்டியல் நூல்களையெல்லாம் ஆராய்ந்து வீரமாமுனிவர் தமது சதுரகராதியுள் முதன் முதலாகப் பிரபந்தங்கள் தொன்னூற்றாறுக்கும் இலக்கணங்களை எடுத்துணர்த்தினார். சதுரகராதிக்குப் பின்னர்த் தோன்றிய பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை என்பவையும் தொன்னூற்றாறு வகைப் பிரபந்தங்களின் இலக்கணங்களை எடுத்துக்கூற எழுந்தவையே.

பாட்டியல் நூல்களிலும் சதுரகராதியிலும் பிரபந்தங்கள் (சிற்றிலக்கியங்கள்) பற்றிக் கூறப்படுவனவற்றை ஆராய்ந்தால் கீழ்க்காணும் உண்மைகள் புலப்படும்.

(i) பத்துப் பாடல்களைக் கொண்ட நூல் முதல் பெருங் காப்பியம் வரை பல்வகையான இலக்கிய வகைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

(ii) பாட்டியல் நூல்களுள் இனவியல், செய்யுளியல், பாவினம் என்னுந் தலைப்புக்களில் எடுத்துணர்த்தப் படும் பல்வகைச் சிற்றிலக்கியங்களும் சதுரகராதியில் இடம் பெற்றுள்ளன.

(iii) வீரமாமுனிவர், பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்பவற்றையும் தொன்னூற்றாறு வகைப் பிரபந்தங் களுள் அடக்கிக் கூறுகின்றார்.

(iv) பிரபந்தங்கள் என்னும் சிற்றிலக்கியங்களை (அ) எண் அடிப்படையில் தோன்றியவை, (ஆ) யாப்பு அடிப் படையில் தோன்றியவை (இ) புறப்பொருள் துறை களின் அடிப்படையில் தோன்றியவை (ஈ) அகப்

பொருள் துறைகளின் அடிப்படையில் தோன்றியவை, (உ) வருணனைகளையே முக்கியமாகக் கொண்டு எழுந்தவை (ஊ) காப்பியங்களில் காணும் ஒரு சிறு பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை, (எ) நாட்டுப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை எனப் பிரித்துணரலாம்.

(v) பிரபந்தங்கள் என வழங்கும் இச்சிற்றிலக்கியங்களுள் சிலவற்றின் பெயர்கள் வடமொழியான் அமைந்திருப்பினும் அவை பெரும்பான்மையும் தமிழ் அமைப்பினையே கொண்டவை. பிரபந்தங்கள் பலவற்றின் பெயர்கள் தொல்காப்பியத்துள் கூறப்படும் திணை துறைகளைப் பற்றியனவாய்க் காணப்படுகின்றன. சில சிற்றிலக்கியங்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இயற்றியருளிய அருட்பாக்களின் கருப் பொருளையும், அமைப்பினையும் அடிப்படையாய்க் கொண்டவை.

பிரபந்தங்கள் எனப்படும் இச்சிற்றிலக்கியங்களுள் அந்தாதி, கோவை, பரணி, கலம்பகம், உலா, தூது, சதகம், மாலை முதலியவை பலவாகக் காணப்படுகின்றன.

விசயநகரப் பேரரசர் காலத்து விளங்கித் திகழ்ந்த புலவர்கள் பலரும் இச்சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றையேனும் இயற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிற்றிலக்கியங்களுள் (பிரபந்தங்கள்) பெரும்பான்மையானவை சமயச் சார்புடையன. இவை மக்களிடையே சமயக் கருத்துக்களைப் பரப்பப் பெரிதும் துணை புரிந்தன. கடவுள்கள் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் இச்சிற்றிலக்கியங்களால் பாடப்பட்டன. மக்கள், புரவலர், அரசர் ஆகியோரின் வேண்டுதலுக்கிணங்கிப் புலவர்கள் பிரபந்தங்கள் பலவற்றையும் படைத்தளித்தனர். புரவலர்கள் மீதும் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. சிற்றிலக்கிய வகைகளுள் பெரும்பான்மையானவற்றை இயற்றித் தந்தவர் வேதாந்த சமயத்தினைச் சார்ந்த தத்துவராயரே. இவர் நமது குருவாகிய சொரூபானந்தரைப் போற்றித் துதிக்குமுகத்தான் பல்வகையான பிரபந்தங்களையும் தமிழுக்களித்தார்.

தெலுங்கில் பிரபந்தம்

தெலுங்கில் பிரௌட பிரபந்தம் என்னுந் தொடருக்குப் பெருங்காப்பியம் — மஹாகாவியம்—என்பது பொருளாகும்.

பொருள் துறைகளின் அடிப்படையில் தோன்றியவை. (உ) வருணனைகளையே முக்கியமாகக் கொண்டு எழுந்தவை (ஊ) காப்பியங்களில் காணும் ஒரு சிறு பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை, (எ) நாட்டுப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை எனப் பிரித்துணரலாம்.

(v) பிரபந்தங்கள் என வழங்கும் இச்சிற்றிலக்கியங்களுள் சிலவற்றின் பெயர்கள் வடமொழியான் அமைந்திருப்பினும் அவை பெரும்பான்மையும் தமிழ் அமைப்பினையே கொண்டவை. பிரபந்தங்கள் பலவற்றின் பெயர்கள் தொல்காப்பியத்துள் கூறப்படும் திணை துறைகளைப் பற்றியனவாய்க் காணப்படுகின்றன. சில சிற்றிலக்கியங்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இயற்றியருளிய அருட்பாக்களின் கருப் பொருளையும், அமைப்பினையும் அடிப்படையாய்க் கொண்டவை.

பிரபந்தங்கள் எனப்படும் இச்சிற்றிலக்கியங்களுள் அந்தாதி, கோவை, பரணி, கலம்பகம், உலா, தூது, சதகம், மாலை முதலியவை பலவாகக் காணப்படுகின்றன.

விசயநகரப் பேரரசர் காலத்து விளங்கித் திகழ்ந்த புலவர்கள் பலரும் இச்சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றையேனும் இயற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிற்றிலக்கியங்களுள் (பிரபந்தங்கள்) பெரும்பான்மையானவை சமயச் சார்புடையன. இவை மக்களிடையே சமயக் கருத்துக்களைப் பரப்பப் பெரிதும் துணை புரிந்தன. கடவுள்கள் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் இச்சிற்றிலக்கியங்களால் பாடப்பட்டன. மக்கள், புரவலர், அரசர் ஆகியோரின் வேண்டுதலுக்கிணங்கிப் புலவர்கள் பிரபந்தங்கள் பலவற்றையும் படைத்தளித்தனர். புரவலர்கள் மீதும் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. சிற்றிலக்கிய வகைகளுள் பெரும்பான்மையானவற்றை இயற்றித் தந்தவர் வேதாந்த சமயத்தினைச் சார்ந்த தத்துவராயரே. இவர் நமது குருவாகிய சொரூபானந்தரைப் போற்றித் துதிக்கு முகத்தான் பல்வகையான பிரபந்தங்களையும் தமிழுக்களித்தார்.

தெலுங்கில் பிரபந்தம்

தெலுங்கில் பிரௌட பிரபந்தம் என்னுந் தொடருக்குப் பெருங்காப்பியம் — மஹாகாவியம்—என்பது பொருளாகும்,

தெலுங்குச் சொல்லும் அமைவுற்றுள்ள அழகும் இதனைச் சிறந்ததாகப் போற்றும் வண்ணம் செய்கிறது.[1]

தமிழில் சதகம்

பழம் பெரும் நூல்களில் சிற்சில அடிகளானும் சிற்சில பாக்களானும் அமைந்த அழகுகள் பிற்காலத்தில் தனித்தனி நூல்களாக உருப்பெற்றன என்பதைச் சிற்றிலக்கியங்களுக்குப் பாட்டியல் நூல்கள் வகுத்துக் கூறும் இலக்கணங்களைக் கொண்டும், தமிழில் காணும் சிற்றிலக்கியங்கள் பலவற்றைக் கொண்டும் உய்த்துணரலாம். புறநானூறு, அகநானூறு ஆகிய நூல்களுள் காணும் புறத்துரைகள் பலவும் அகத்துறைகள் பலவும் பிற்காலச் சிற்றிலக்கியங்களுக்கு அடிப்படைகளாக அமைந்தன. இங்ஙனம் எழுந்த சிற்றிலக்கிய வகைகளுள் அந்தாதி, கைக்கிளை, கோவை, செருக்களவஞ்சி கையறுநிலை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சிற்றிலக்கியங்களுள் சில வடமொழியின் தொடர்பு காரண மாகத் தோன்றின எனலாம். வடமொழி இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றுணர்ந்தோர் தமிழில் நூல்களியற்றப் புகுந்தபோது இயற்கையாகவும் செயற்கையாகவும் இத்தகைய சிற்றிலக்கியங்களை இயற்றலாயினர் என்பது பொருந்தும். சதகம் என்னும் சிற்றிலக்கியம் தமிழில் தோன்றி வளர்ந்ததற் குரிய காரணம் இஃதேயாகலாம்.

'சதகம்' என்னும் சிற்றிலக்கியம் பற்றிய இலக்கணம் காலத்தால் முந்திய பாட்டியல் நூல்களுள் காணப்படவில்லை. கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கப் பாட்டியலுள்,

> **'விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு**
> **தழைய உரைத்தல் சதக மென்ப'** **(28)**

என்று கூறப்பட்டுள்ளது.

பதினேழாம் நூற்றாண்டினிறுதியிலும் பதினெட்டாம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வீரமாமுனிவர் 'தமது சதுரகராதியுள் 'சதகம்—அகப்பொருளொன்றன் மேலாதல்

---

1. வே. வேங்கட ராஜுலு ரெட்டியார்: தென்மொழி கள்; ப. 84.

புறப்பொருளொன்றன் மேலாதல் கற்பித்து நூறு செய்யுட் கூறுவது என்று கூறியுள்ளார்.

பாட்டியல் நூல்கள் எழுவதற்கு முன்னரே 'சதகம்' தமிழில் இருந்தும், பாட்டியல்களில் இடம்பெறாதது ஆராய்தற் குரியது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்று போற்றப்படும் மணிவாசகப் பெருந்தகை 'திருச்சதகத்' தினை அருளிச் செய்தார். 'சதகம்' என்னும் சொல் முதன் முதலாகக் காணப்படுவது திருவாசகத்திலேயாம். சதகம் என்பது சதம் என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. தெலுங்கு மொழியில் இச்சிற்றிலக்கியம் சதகம் என்றே வழங்குகிறது.

திருவாசகத்திலுள்ள திருச்சதகம் 'மெய்தானரும்பி' என்று தொடங்கி 'மெய்யர் மெய்யனே' என்று முடிகிறது. மாணிக்க வாசகர் நூலுள் காணப்படுவதே முதற் சதகம். மணிவாசகரு டைய திருச்சதகத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை நூறு. அவை பத்துப் பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அங்ஙனம் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனித் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. வெவ்வேறு யாப்பு வகையிலான பத்துப் பாடல்களும் அந்தாதித் தொடையால் இணைந்துள்ளன. திருவாசகத்தில் காணும் திருச்சதகத்திற்கும் திருவாசகத்திற்குப் பின்னர்த் தோன்றிய சதகங்களுக்கு மிடையே பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருவாச கத்தில் காணும் திருச்சதகம் நூறு செய்யுட்கள் கொண்டி லங்கும் காரணத்தினாலேயே பிற்காலத்தவரால் 'சதகம்' என்று அழைக்கப்பட்டது எனலாம். பிற்காலத்துச் சதகங்களில் காணும் மகுடம் திருச்சதகத்தில் காணப்படவில்லை. பிற் காலத்துச் சதகங்கள் அந்தாதித் தொடையால் அமைந்தவை யல்ல. பிற்காலத்துச் சதகங்களில் காணும் நூறு பாடல்களும் ஒரே வகைப் பாவால் அமைந்தவை.

தமிழில் காணும் சதகங்களுள் மண்டல சதகங்களே காலத் தால் முந்தியவை. அவற்றுள் முதலாவதாக வைத்தெண்ணப் படுவது ஆறைகிழார் இயற்றிய கார்மண்டல சதகமாகும். இந்நூல் பதினொன்றாம் நூற்றாண்டினைச் சேர்ந்தது— 'காராளர் மண்டலமே' என்னுந் தொடரை மகுடமாகக் கொண்டு நடக்கும் பாடல்களைக் கொண்டது கார் மண்டல சதகம். மண்டல சதங்கங்களுள், பாடப்படும் மண்டலத்தின் எல்லை அந்த மண்டலத்துள் இறைவன் கோயில் கொண் டிருக்கும் திருப்பதிகள், அவ்விறைவனைப் போற்றி

அவனருளைப் பெற்ற அடியவர், அம்மண்டலத்துத் தோன்றி அரசோச்சி வந்த அரசர்கள், புலவர்கள், அம்மண்டலத்து வாழ்ந்த புலவர்களைப் புரந்து வந்த வள்ளல்கள், பத்தினிப் பெண்டிர் ஆகியோரின் சிறப்பும் செய்கையும் பீடும் பெருமையும் போற்றியுரைக்கப்படும். சோழமண்டல சதகம் ஆத்மநாத தேசிகரால் இயற்றப் பட்டது; தொண்டை மண்டல சதகம் படிக்காசுப் புலவரால் பாடப்பட்டது. படிக்காசுப் புலவர் பாடியருளிய மற்றுமொரு சதகநூல் தண்டலையார் சதகமாகும். இந்நூல் பழமொழி விளக்கம் எனவும் வழங்கும். தண்டலை என்னும் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைப் (நீள்நெறிநாதர்) போற்றிப்பாடும் தண்டலையார் சதகத்துப் பாடல்கள் மகுட மின்றி அமைந்தன. சாந்தலிங்கர் இயற்றிய வைராக்கிய சதகம் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் விளங்குகின்றது. இச்சதகப் பாடல்களும் மகுடமின்றி அமைந்தன.

சதகங்கள், இறைவனை, வள்ளலைப் போற்றுபவையாக அமையும். நீதிகளை எடுத்துணர்த்துவதும் சதக நூலாசிரியர் பண்பாகக் காணப்படுகிறது.

தெலுங்கில் சதகங்கள்

தெலுங்கு மொழியில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சதக நூல்கள் உள்ளன என்று திவாகர்ல வெங்கடாவதானியும்[1] தெலுங்கில் இன்று வரை கிடைக்கும் சதக நூல்களின் எண் ணிக்கை ஏறக்குறைய அறுநூறு என்று செஞ்சய்யாவும்[2] கூறு கின்றனர்.

மாதவ சர்மா, பாஸ்கர சதகத்திற்குத் தாமியற்றிய முன்னுரையில், தெலுங்கு மொழியில் ஏறக்குறைய ஐயாயிரம் சதக நூல்கள் உள்ளன என்று கூறுகின்றார்.

எனவே, தெலுங்கு மொழியில் காணும் சதகங்களின் எண்ணிக்கை, தமிழ்மொழியிலுள்ள சதகங்களின் எண்ணிக்கை யினும் பன்மடங்கு அதிகமானவை என்றறியலாம். தெலுங்கில் காணும் முதற் சதக நூலைத் தந்தவராகப் போற்றப்படுபவர் மல்லிகார்ச்சுனபண்டிதர். (12-ம் நூற்றாண்டு) இவர் இயற்றிய

1. ஆந்திர வாங்மய சரித்ரமு; ப. 133.
2. A History of Telugu Literature, p. 98.

'சிவதத்துவ சாரமே' என்று பண்டிதாராதிய சரித்திரத்தில் (வாதப் பிரகரணமு. 513) பால்குரிகி சோமநாதர் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுள் அஜா, ருத்ரா, சிவா என்னும் மகுடங்களைக் கொண்ட பாடல்கள் காணப்படுகின்றன.

சதகத்தின் இலக்கணங்களால் நிரம்பிய விருஷாதிப சதகம் பால்குரிகி சோமநாதரால் (12ஆம் நூற்றாண்டு) இயற்றப் பட்டது. இவ்விரண்டு நூல்களுக்கும் முன்னர்த் தோன்றிய தெலுங்குப் 'பிரதமாசாரியர்' (நன்னயா) இயற்றிய பாரதத்துள்ளும் சதகக் கூறுகள் காணப்படுகின்றன என்று கூறும் வெங்கடாவதாநி, சதகத்திற்குரிய மகுடம் போன்ற பகுதிகள் மூன்று, பாரதத்து ஆதிபருவத்துள் காணப்படுகின்றன என்பார்.[1]

நன்னெசோடனின் குமார சம்பவத்திலும் சதகப் பாடலைப் போன்ற துதிப்பாடல்கள் உள்ளன என்றும் தெரிய வருகிறது.

சதகம் என்பது தெலுங்கிலும் நூறு பாடல்களைக் கொண்ட இலக்கிய வகையாகவே காண்கிறது. பாஸ்கர சதகம் போன்ற பல சதகங்கள் நூற்றெட்டுப் பாடல்கள் கொண்டவையாய் விளங்குகின்றன. இறைவனுடைய நாமாவளியில் பெயர்கள் நூற்றெட்டு என்று இருப்பதையொட்டிப் பல சதகங்களும், நூற்றெட்டுப் பாடல்களைக் கொண்டவையாய் அமைந்தன. (ராமராம சதகம், நரசிம்ம சதகம்)

தெலுங்குமொழிச் சதகங்களில் மகுடம், பிரத்தியேக பாவம், சங்கியா நியமம் என்னும் மூன்றும் அமைந்திருக்கும். அவற்றுள் மகுடம் என்பது பாடல்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் விளியாக அமைவது. சதகத்திற்கே உரிய நடை பிரத்தியேக பாவம் எனப்படும். சங்கியாநியமம் என்பது சதகத்திற்குரிய பொருளை வரையறுத்துக் கொள்வதாகும்.

சதகங்கள் தெலுங்குக்குரியவையாயும் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்தமைத்தனவாயும் காணப்படுகின்றன. மொழிபெயர்ப்புச் சதக நூல்களுள் மேற்கூறிய மகுடம், பிரத்தியேக பாவம், சங்கியா நியமம் என்னும் மூன்றும் அமைய வேண்டும் என்னும் நியதி இல்லை.

---

1. முன் சுட்டியது; ப. 136.

தெலுங்குச் சதகங்களில் காணும் மகுடங்கள் மூன்று வகைகளாகப் பிரித்துணரப்படும்.

(i) ஏகசப்தி மகுடம் (ஹர, சிவ என்பன போன்றவை)

(ii) அர்த்த பாத மகுடம் (அரை அடி மகுடம்)

(iii) ஏகபாத மகுடம் (ஓரடி மகுடம்)

மகுடங்களை ஒட்டிச் சதகங்களின் பெயர்கள் அமைந்தன. மகுடங்களில் காணப்படும் பெயர்கள் அம் மகுடங்களைக் கொண்ட சதகங்கள் யாருக்குக் காணிக்கையாக்கப் பட்டனவோ அவர்களின் பெயர்களாகவும் அமைந்தன.

தெலுங்குச் சதகங்களை ஞானசதகம், பக்திச் சதகம், சிருங்காரச் சதகம், நைத்திக சதகம், வைராக்கிய சதகம், இராகிய சதகம், சங்கிக சதகம், திருஷ்டாந்த சதகம் நிந்தை சதகம், சங்கீர்ண சதகம் எனப் பத்தாகப் பகுத்துக் கூறுவர்.

வெங்கடாவதனி, நீதிசதகம், பக்தி சதகம், வியாஜஸ்துதி சதகம், தத்துவ சதகம் என நான்காக வகைப்படுத்துவார்.

அண்மையில் இயற்றப்பட்ட விஸ்வேஸ்வர சதகம் வெங்கட் ரத்னம் பந்துலுகாருவின் சுயசரிதமாக அமைந்தது.

கடவுளின் பல்வேறு பெயர்களைச் சீசபத்ய யாப்பில் எடுத்துக் கூறும் நிகண்டு சதகம் என்னும் நூலை வேங்கடகவி இயற்றினார்.

சதகங்கள் தெலுங்கிலுள்ள பெரும்பான்மையான நூல்களைப் போலல்லாமல் ஒரே யாப்பில் அமைவன. தெலுங்குச் சதகங்களில் பக்திக்கே முதலிடம்.

புலவரும் புரவலரும்

கிருஷ்ணதேவராயர் சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு என்னும் மும்மொழிகளிலும் வல்லவராயிருந்தார். போர் வென்று புகழை நிலை நாட்டியதுபோலவே இலக்கியங்களில் துறைந்தாடி இன்புற்று இலக்கியம் இயற்றுவாரைப் புரந்து மகிழ்ந்து, இணையில்லாக் காவியம் தந்து புகழ் கொண்டார். அவரைப் போலவே அவருக்காகத் தெற்குப் பகுதியில் தமிழ்நாட்டில் ஆண்ட மன்னர்கள் சமஸ்கிருதத்தையும், தெலுங்கு மொழியையும், தமிழ் மொழியையும் போற்றிப் புரந்து வந்தனர்.

குமாரசரசுவதி, அரிதாசர், தத்துவப் பிரகாசர், கச்சி ஞானப்பிரகாசர், மண்டல புருடர், வடமலையார் என்போர் கிருஷ்ணதேவராயர் ஆதரவுபெற்ற தமிழ்ப்புலவராய்த் திகழ்ந் தனர்.

விசய நகர அரசர்களில் தலைசிறந்தவராகக் கருதப்படும் மேற்சொன்ன கிருஷ்ணதேவராயர் அவையிலே தமிழ்ப்புலவர் களும் வீற்றிருந்தனர். குமார சரசுவதி என்பார் அவருள் ஒருவர். இவர், கிருஷ்ண தேவராயர் ஒட்டிர அரசர்களைத் தோற்கடித்ததைப் பாடுகிறார். ஒட்டிர அரசர்களுக்குக் கஜபதி என்னும் பட்டம் உண்டு. அவர்களுள் கடகத்தை ஆண்ட அரசனும் ஒருவன். அவனைக் கிருஷ்ண தேவராயர் வென்றடக்கி னார்; அவனுடைய மகளையும் மணந்தார். குமார சரசுவதி என்பவர் இதனை,

‘கலிங்க மிழந்துநுதிக் கைச் சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டான்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானக் ருஷ்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியான்போற் பெண்!

என்னும் சிலேடை நயஞ்சான்ற பாடலால் எடுத்துரைத்தார்.

அரிதாசர்

அரிதாசர் என்னும் புலவர் கிருஷ்ண தேவராயரின் அன்பிற்குரியவராயிருந்தார். அரிதாசர், அரிகண்டபுரத்தில் திருமாலைப் பிரதிஷ்டை செய்தவர். திருமாலின் பெருமையையும், சிவபெருமானது பெருமையையும் எடுத்துக் காட்டிச் சிவபெருமானும் திருமாலே எனக் கூறும் 'இரு சமய விளக்கம்' என்னும் இனிய தமிழ் நூலைத் தந்தருளினார். இந்நூல் கடவுள் வாழ்த்துள் இவர்,

''கிரிபோல் விளங்கிக் கிளரும் புயக் கிருட்ணராயர்
தரைமீது சிங்காத் திரியிற் சயத் தம்ப நாட்ட''

எனப் பாடிக் கிருஷ்ணதேவராயரின் வெற்றிச் சிறப்பைப் புலப்படுத்தியுள்ளார்.

கிருஷ்ண தேவராயர் பலமொழிகளையும் ஆதரித்து வந்தது போலவே பல சமயத்தினரையும் வேறுபாடின்றி ஆதரித்து வந்துள்ளார். சைவ சமயத்தவராகிய தத்துவப் பிரகாசர் என்பவரையும் ஆதரித்தார். தத்துவப் பிரகாசர் பாடியனவாகப் பதின்மூன்று பாடல்கள் தமிழ்நாவலர் சரிதையுள் காணப்படுகின்றன. இப்பதின்மூன்று பாடல்களுள் ஒன்று கிருஷ்ண தேவராயர் மீது பாடப்பட்டதாகும்.

''மருவு புகழ்க் கிருட்ண மகராயர் ஆணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
தியாகக் கொடியிறக்கா தே'' **(227)**

இவர், தியாகேசர் கோயில் திருவிழாக்கள் சரியாகக் கொண்டாடப்படாததற்கு உளம் வருந்திக் கிருஷ்ண தேவராயருக்கு அது பற்றி எழுதினாரென்றும், அதன் காரணமாகக் கிருஷ்ண தேவராயர் கோயில் பட்டரை மாற்றி முறைசெய்தாரென்றும் தெரிய வருகின்றது.

தத்துவப் பிரகாசரிடம் கிருஷ்ண தேவராயர் நன்மதிப்புடையவராயிருந்தார். பழங்காலப் புலவர்களைப் போல

அஞ்சா நெஞ்சமும், குறைகளை எடுத்துக் காட்டி அரசனிடம் முறை செய்யும்படியாகக் கோரும் பண்பும் உடையவராகத் தத்துவப் பிரகாசர் விளங்கியது வியந்து போற்றத்தக்கது. ''யாழி சிறந்த திருவாரூர்த் தியாகருடைப் பூசை இறந்ததே கிட்டிணராயா' என்று தத்துவப் பிரகாசர் பாடியுரைத்தார்.

ஞானப் பிரகாசரைக் கிருஷ்ண தேவராயர் பல்வகைப் பரிசுகளையும் பட்டங்களையும் தந்து போற்றினார். ஞானப் பிரகாசருக்கு வாடாப் புகழ்க் கிருட்டிணராயர், சொர்ணச் சிவிகை தந்தார்; இரத்தினமிழைத்த குல்லாய் கொடுத்தார்; தெய்வீக வினோதன் என்னும் விருது தந்தார். ஞானப்பிரகாசர் கிருட்டிணராயருக்கு மஞ்சரிப்பா' வினைத் தந்தார் எனத் தொண்டை மண்டல சதகம் (95) நவில்கிறது.

கிருஷ்ண தேவராயர், தெலுங்கில் 'மனுசரித்திரம்' என்னும் பெருநூலைத் தந்தவரும், எட்டுத் திக்கஜங்கள் என்று போற்றப் படும் புலவர் பெருமக்களுள் ஒருவருமாகிய அல்லசாநி பெத்தண்ணாவுக்குச் சிறப்புச் செய்தது போல ஞானப்பிரகாச ருக்குச் சிறப்புச் செய்தார்.

மண்டல புருடர் என்னும் புலவரும் கிருஷ்ணதேவராயர் காலத்திருந்தவரே. இவர், பெருமண்டூரில் வாழ்ந்த சமணத் தமிழர். இப்புலவர், சமணர்களின் புண்ணியத் தலமான சிரவண பௌகுளம் சென்று ஸ்ரீபுராணத்தைக் கற்றுத் தமிழில் அப்புரா ணத்தினை இயற்றியளித்தார் எனக் கூறுவர்.

இப்புலவர், தாமியற்றிய சூடாமணி நிகண்டில் கிருட்டிண தேவராயரின் கொடைத் தன்மையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

''படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கெடி மன்னர் வணங்குந்தாளான் கிருட்டிணராயன்கைபோற்
கொடைமடம் என்ப தம்ம வரையாது கொடுத்தலாமே''

(9:10)

மண்டல புருடர் வாழ்ந்த காலத்தில் திருநறுங் கொண்டை என்னும் ஊரில் நாற்பத்தெண்ணாயிரம் பள்ளியென இருந்த சமண மடத்தின் தலைவராகக் குணபத்திரர் என்பார் இருந் தார்.

கிருஷ்ணதேவராயர் புலவர்க்குப் பொன்னும் பொருளும் நிலமும் தந்து புரந்தருளும் பெற்றி சான்றவர். அவ்வகையில் அவரால் போற்றப்பட்ட புலவர்களுள் வடமலையார் என்பவரும் ஒருவர். அவர், வடவார்க்காட்டில் ஆற்றுவான்பாடி என்னும் ஊரினைச் சார்ந்தவர். இவருடைய தந்தையார் திருவெங்கல நாதர். இவருடைய குடும்பமே புலமை சான்ற பெருமக்களால் நிறைந்தது.

விசய நகர வேந்தர் காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டுவந்த அரசர் பலரும், பெருநிலக் கிழார்களும் தமிழ்ப் புலவரைப் புரந்து வந்தனர்.

பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரை வக்கபாகை வரபதி யாட்கொண்டான் ஆதரித்தான். தன்னைப் புரந்த அப்புரவலனை வில்லிபுத்தூராழ்வார் தமது நூலுள் போற்றிப் பாடியுள்ளார்.

'பெண்ணை, வளம் சுரக்கும் நாடன், மாகதக் கொங்கர் கோமான் பாகை ஆட்கொண்டான்',

'சொன்மழை பொழிந்து நாள்தோறும் தனது தோள்வலி துதிக்கும் நாவலர்க்குப் பொன்மழை பொழியும் கொங்கர்பூபதி பொற்பதம்' என நடக்கும் பாவடிகள் புரவலன் வரபதியாட் கொண்டானின் புலவரைப் போற்றும் தன்மையை எடுத்துக் காட்டுவன.

இரட்டைப் புலவர் பாட்டுக்கு மகிழ்ந்து அவர்களுக்கு விருந்தூட்டியவன் வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்பதைத் தமிழ் நாவலர் சரிதை (110) வாயிலாக அறியலாம்.

இரட்டையர், ஏகாம்பரநாத சம்புவராயனையும் பாடினர் (த. நா. ச. 112) இச்சம்புவராயனே வென்று மண் கொண்ட சம்புவராயனாவான்.

அருணகிரிநாதரை வழிபட்டுப் போற்றியவன் பிரபுட தேவராயன் என்னும் அரசனாவான். பிரபுடதேவ மகராஜனை அருணகிரிநாதர்,

> **'உதயதாம மார்பான பிரபுடதேவ மகராஜன்**
> **உளமுமாட வாழ் தேவர்'**

என்னும் திருப்புகழ் அடிகளால் குறிப்பிடுகின்றார்,

ஆசுகவி காளமேகப் புலவரைப் புரந்தவன் சாளுவத் திருமலைராயன் என்பதைத் தமிழ் நாவலர் சரிதை உணர்த்தும்.

'சந்த தமிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய் கல்யாணிச்
சாளுவத் திருமலை ராயன்' (208)

காளமேகப் புலவருக்குத் தக்க பரிசிலும் மிக்க செல்வமும் தந்து சிறப்பித்தவன் சாளுவத் திருமலைராயன் ஆவான். இத் திருமலை ராயனைப் புலவர் பல பாடல்களில் குறிப்பிடுகிறார்.

சிவாக்கிர யோகிகளைப் புரந்தவன் செவ்வப்ப நாயக்கன் என்பவனாவான். இவன் தஞ்சையை ஆண்டு வந்தவன். அப்பொழுது விசயநகரத்தை அரசாண்டவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். செவ்வப்ப நாயக்கன் சிவாக்கிர யோகிகளது பெருமையைக் கேட்டு அவரைச் சென்று கண்டு வணங்கித் தஞ்சைக்கு அழைத்து வந்து போற்றி மகிழ்ந்தான். அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கியே சிவாக்கிர யோகிகள், 'சைவ சந்நியாச பத்ததி' என்னும் நூலை இயற்றியருளினார்.

அநதாரியப்பரைப் புரந்தவன் தண்டாயுதபாணி மகிபன் என்பவன். அநதாரியப்பர், மதுரைக் கிருஷ்ண வீரப்ப நாயக்கனுடைய அமைச்சன் சனிப்பெருமான் மகன் திருவிருந்தான் வேண்ட, 'சுந்தர பாண்டியம்' என்னும் நூலை இயற்றியளித்தார்.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் துறையூர்ப் பாளையப் பட்டை அரசாண்டு வந்த இலிங்கதுரை, சித்தர் சிவப்பிரகாசருக்குத் துறையூரில் ஒரு மடம் அமைத்துத் தந்தார். இது துறையூர் மடமாகத் திகழ்ந்தது. தில்லையில் கூத்தப் பெருமானுக்கு நித்தியப்படி பூசை முதலாயின விசய நகர அரசர்களது காரிய கர்த்தர்களால் தடைப்பட்டன. திருவாவடுதுறை மடத்துத் தலைவரான நமச்சிவாய மூர்த்திகளின் கட்டளைப்படி அவரின் அணுக்கத் தொண்டரான சிவப்பிரகாசர், இலிங்கண்ணா என்னும் இலிங்கம நாயக்கரை வேலூரில் சென்று கண்டார். இலிங்கம நாயக்கர், தில்லையில் பூசைகள் செவ்வனம் நடைபெறும் படியாகச் செய்தார்.[1]

---

1. The South Indian Inscriptions Vol. 3 Part I (1955) p. 1206.

குமர குருபரர் திருமலை நாயக்கரைத் தாம் பாடியருளிய மீனாட்சியம்மைக் குறத்தில் (51) போற்றிப் பாடுகின்றார். மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழுடன் குமரகுருபரரை யானை மீது எழுந்தருளப் பண்ணி நகர்வலம் செய்வித்தவர் திருமலை நாயக்கராவார். 'மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்' திருமலை நாயக்கர் அவையில் அரங்கேறியது.

திருமலை நாயக்கர், குமரகுருபரரை அரியணையில் எழுந்தருளுவித்து அவர் திருவடிகளில் வீரகண்டா மணியைச் சூட்டிப் பொன்னாலும் இரத்தினங்களாலும் அபிடேகம் செய்து யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலியவற்றை அளித்துப் போற்றினார்.[1]

இந்நிகழ்ச்சி, விசயநகரப் பெருவேந்தராகத் திகழ்ந்த கிருஷ்ண தேவராயர், அட்டதிக் கஜங்களுள் ஒருவராகப் போற்றப்பட்ட பெரும்புலவர் அல்லசாநிபெத்தநருக்குச் செய்த சிறப்புகளுக்கு ஒத்ததாக அமைந்தது எண்ணி வியக்கத்தக்கதாகும்.[2]

பேரம்பலத் தம்பிரான் மடத்து உருத்திரக் கோடித் தம்பிரான் தமிழ்ப் புராணம் பாடித் தருமாறு அந்தகக் கவி வீரராகவ முதலியாரை வேண்டிக் கொண்டார். அவரும், அவர் விருப்பத்திற்கிணங்கித் திருக்கழுக்குன்றப் புராணத்தைப் பாடியருளினார். அந்நாளில் விசயநகர அரசர் சார்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் காரிய கர்த்தராக இருந்த திம்மையவப்பன் என்பாரைத் திருக்கழுக்குன்றப் புராண அரங்கேற்றத்திற்கு வரும்படியாகக் கேட்டு அந்தகக் கவி வீரராகவர் ஒரு சீட்டுக்கவி பாடினார். (த. நா. ச. 256)

திருமலை நாயக்கர் காலத்தில் அவர் கீழிருந்த தலைவர்களுள் வெங்களப்ப நாயக்கரும் ஒருவர். இவரும் திருமலை நாயக்கர் போலவே தமிழைப் புரந்து வந்தார். இவர் காலத்திலிருந்த புலவர் மணியாகிய அழகிய சிற்றம்பலக் கவிராயர் இவர் மீது ஒரு பிரபந்தம் பாடினார். வெங்கப்ப நாயக்கர்

1. நீதிநெறி விளக்கம்; வி. மாணிக்கவாசகம்பிள்ளை (பதி) ப. xxxvi.

2. Krishnarayalu the man—K. Raghava charlu; Vijaya nagar Sixth-Centenary Commemoration Volume; 1936; p. 181, 186.

புலவருக்கு மிதலப்பட்டி என்னும் ஊரை முற்றூட்டாக வழங்கினார்.

வடமலையப்ப பிள்ளையென்பாரும் திருமலை நாயக்கரது காரியகர்த்தர்களுள் ஒருவராய்த் திருநெல்வேலி யிலிருந்தார். பாகை அழகப்பன் என்னும் புலவர் இப்புரவலர் மீது 'வடமலை வெண்பா' என்னும் நூலைப் பாடினார்.

மகரநெடுங்குழைக்காதர் பாமாலையைச் சிறையிலிருந்த போது பாடிய நாராயண தீட்சிதரைச் சிறைவீடு செய்து போற்றிய புரவலனும் காவை வடமலையப்ப பிள்ளையே! வள்வார் முரசதிர் கோமான் வடமலையப்பன்' என்று இவனைப் புலவர் குறிப்பிடுகின்றார்.

துறைமங்கலம் சிவப்பிரகாசரைப் புரத்தவர் அண்ணாமலை ரெட்டியார் ஆவார்.

கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்திற்குப் பின்பு அரசு புரிந்த அச்சுத தேவ மகாராயரும் தமிழ்ப் புலவர்களைப் புரந்து வந்தார். நெல்லிநகரத்துப் புலவர் பாடியருளிய 'பாகவத புராணம்' இவர் காலத்தெழுந்ததாகும். அச்சுததேவ மகராயர் இப்புலவரைப் புரந்து போற்றியவர் என்பது அந்நூலின் பாயிரத்தால் அறியவரும் செய்தியாகும்.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பாளையப் பட்டுக்கள் பலவும் தெலுங்குத் தலைவர்களின் தலைமையைக் கொண்டிருந்தன. இவருள் பலரும் தமிழ்ப் புரவலர்களாய் வீற்றிருந்து புலவர்களைப் புரந்து வந்தனர். கூளப்பநாயக்கன் மீதமைந்த 'விறலி விடு தூது' போன்ற சிற்றிலக்கியங்கள் இக் காலத்தில் எழுந்தவையே!

மொழித் தொடர்பு

ஒலி மாற்றம்

பழந்தமிழ் (திராவிட) மொழிச் சொற்கள் ஒலியில் ஒத்தும், குறைந்தும், திரிந்தும் கொள்ளும் வடிவங்களைத் தெலுங்கில் காணலாம். அத்தி, அரங்கு, அரிது, அல்லி, ஆணி, ஆர, ஆ, ஈடு, உச்சி, உப்பு, ஒப்பு, கள்ளி, கத்தி, கரி, காட்டேரி, காடு, காவி, கூலி, கை, செவி முதலியன ஒலிவடிவத்தாலும் பொருளாலும் ஒத்தனவாய்த் தெலுங்கில் வழங்கி வருகின்றன.

அக்க, அம்ம, அப்ப, அய்ய, ஓல, காழ (காம்பு) தாத (தாத்தா), நலுகு (நலங்கு) முதலிய தெலுங்குச் சொற்கள் ஒலி வடிவத்தில் குறைந்து காண்கின்றன. எலுக, எவரு, காலி (கால் (காற்று) தொலி (தொல்) நாலுகு (நான்கு—நாலு) முதலிய தெலுங்குச் சொற்கள் ஒலிவடிவத்தில் மிகுந்து காண்கின்றன.

அப்பமு (அப்பம்), இல்லாளு (இல்லாள்), உசுரு (உயிர்—உசுர்), எதுரு (எதிர்), எவரு (எவர்), கலு (கல்), கொலனு (குளம்) சூலு (சூல்), தாலு (தாள்) முதலிய தெலுங்குச் சொற்கள்—உகரத்தை இறுதியில் கொண்டு வழங்குகின்றன.

தமிழில்-அய் (ஐ) ஒலியில் முடியும் பல சொற்களைத் தெலுங்கில் - அ ஒலியில் முடிவனவாகக் காணலாம் அத்தை-அத்த, அகப்பை - அகப, அறை - அர, ஊளை - ஊல, கட்டை-கட்ட, கடை (இறுதி)- கட, கணவாய் - கநவ, கால்வாய் - கால முதலியன.

பேச்சுத் தமிழில் க, ட, த, என்பவை முறையே க(g), ட(D), த(d) என்னும் ஒலிப்பைப் பெறும். இவ்வொலிப்பினை எழுத்துத் தெலுங்கினில் காணலாம் அகில்—அகிலு; ஈடு—ஈடு; இது—இதி.

'ற'கர 'ர'கர வேறுபாட்டினைத் தமிழர் சிலரின் பேச்சு மொழியில் காணக் கூடுவதில்லை. தெலுங்கு மொழியிலும் இவ் வேறுபாட்டினைப் பெரும்பான்மையும் காணவியலாது.

தமிழ்	தெலுங்கு	தமிழ்	தெலுங்கு
அக்கறை	அக்கர	திறை	தெர
அறுபது	அருபது	திறப்பு	தெரப்பு
ஆறு	ஆரு	தேறுதல்	தேருதல்
ஆறுதல்	ஆருதல்	தூறுதல்	தூருட
இருநூறு	இந்நூரு	சிறு	சிரு(ந)வ்வு
உறவு	உரவு	குறி	குரி
உறி	உரி	குறவஞ்சி	கொரவஞ்சி
ஏற்பாடு	ஏர்பாடு	வேறு	வேரு
முறை	மொர	பிற	பெர

முதலியன இக் கருத்துக்குச் சான்றுகளாம்.

தமிழ் 'ண'கரமும், 'ன'கரமும் தெலுங்கில் நகரமாக ஒலித்தலைக் காணலாம்.

மண்—மந்து நென்னல்—நிந்ந
கண்—கந்து தான் —தாநு
அணை—அந சினை —செந

முதலியன.

தமிழ் 'ள'கரம் தெலுங்கில் 'ல'கரமாகவும் 'ட'கரமாகவும் ஒலிப்பதைக் கேட்கலாம்.

ள—ல	ள—ட
உளி—உலி	இளநீர்—எடநீள்ளு
ஊளை—ஊல	அவள்—ஆவிட
இள—எல	

தமிழ் 'ழ'கரம் தெலுங்கில் 'ட'கரமாக ஒலித்தலைப் பின் வரும் சொற்களில் கேட்கலாம்.

ஏழு	- ஏடு	கீழ்நிழல்	- கீநீட
பாழு	- பாடு	கீழ்மேல்	- கீடுமேள்ளு
புகழ்	- பொகடு	கீழ்த்தொடை	- கீடுதொட
புகழ்தல்	- பொகடுட	இழுத்தல்	- ஈடுசுட

கோழி	- கோடி	எப்பொழுது	- எப்புடு
கீழ்	- கிடு		

முதலியன.

தமிழ்ஃ, தெலுங்கில் 'க்க' என்றொலிப்பதை அஃகு - அக்கு என்னும் எடுத்துக்காட்டால் அறியலாம்.

தமிழ்-ற்ற-பேச்சுத் தமிழில்-ட்ற-என்றும் தெலுங்கில்-ட்ட-என்றும் ஒலித்தலைப் பின்வருவன எடுத்துக்காட்டும்.

எழுத்துத் தமிழ்	**பேச்சுத் தமிழ்**	**தெலுங்கு**
மாற்றம்	மாட்றம்	மாட்ட
பற்று	பட்று	பட்டு
சுற்று	சுட்று	சுட்டு
சுற்றுப்பட்டு	சுட்றுப்பட்டு	சுட்டுப்பட்டு
சுற்றுதல்	சுட்றுதல்	சுட்டுட

சில சிறப்புச் சொற்கள்

திருமலை

தமிழ்நாட்டு வடக்கு எல்லைக் கல்லாக இருந்த 'திருமலை' இக்காலத்துத் தெலுங்கு மக்களால் 'திருமலா' என்று அழைக்கப் படுகிறது. திருமலா என்பதே 'திருமலை' எனத் தமிழில் உள்ளது என்று எண்ணி மயங்குவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. 'ஏழுமலை' என்பது திருவேங்கடத்தைக் குறிக்கும். 'ஏழுமலை' என்னும் பெயரைத் தமிழர்கள் தம் மக்களுக்குச் சூட்டி மகிழ்ந் தனர். ஏழுமலையான் என்பது 'ஏடுகொண்டலவாடு' எனத் தெலுங்கு நாவில் ஒலிக்கும். இப்போது, ஏழுமலை 'சப்தகிரி' யாக உருமாற்றம் அடைந்துள்ளது. 'சப்தகிரி' பெருவழக்கின தாக மாறி வருகிறது.

நெட்டுயிர்ப்பு

தமிழில் நெட்டுயிர்ப்பின் இடத்தைப் பெருமூச்சு பிடித்துக் கொண்டது. 'நெட்டுயிர்ப்பு' தெலுங்கில் பேச்சு வழக்கிலும் 'நிட்டூர்ப்பு' என்னும் ஒலி வடிவத்துடன் வாழ்ந்து வருகின்றது.

சாறு, சால

அவ்வண்ணமே, 'சாறு' (தமிழ்-ரசம்), 'சால' (தமிழ் உரிச் சொல்) எனும் தமிழர்களால் கைவிடப்பட்ட சொற்கள் தெலுங்கில் (பேச்சிலும்) வழக்காறு பெற்று வாழ்ந்து வருகின்றன.

காலி

தமிழ்க் 'கால்' (காற்று) தெலுங்கில் 'காலி'யாக உலவி வருகின்றது.

கல், கள்

'கல்' (Stone) என்னும் சொல்லுக்கு நேரான தெலுங்குச் சொல் 'கலு' என்பதாகும். 'கலு' வழக்காறிழந்தது. 'ராயி' என்னும் சொல்லே இப்போது வழக்கிலுள்ளது. தமிழில் வழங்கும் 'கள்' (மது) என்னும் சொல்லுக்கு நேரான தெலுங்குச் சொல்லாகக் 'கலு' 'கல்லு' என்னும் சொற்கள் வழக்காற்றில் நின்றன. எனவே, 'கல்' (Stone)லைக் குறிக்க வழங்கிய 'கலு' (தெலுங்கு) பொருள் முரணைத் தவிர்க்கும் வகையில் 'ராயி' என்னும் சொல்லுக்கு இடமளித்தது. ஆனால், உப்பு கல்லு, ஒரகல்லு (உரைகல்) தோரணக்கல், குண்டக்கல், வாரங்கல் என்பவற்றுள்—'கல்லு'-'கல்' எனக் 'கல்' (Stone) வாழ்ந்து வருகிறது. உப்பு ராயி, ஒரராயி எனும் வழக்காறு இல்லை.

'ஒரு கல்' என்பது வாரங்கல் என்னும் ஊரைக் குறிக்கும். இவ்வூருக்குத் தமிழ்க் கம்பர் சென்றிருந்தார் என்பது வரலாறு. அவர் காலத்தில் அவ்வூர், 'ஓரங்கல்' என்னும் பெயரால் வாழ்ந்து வந்தது. 'ஒரு கல்' 'ஓரங்கல்' என ஒலிமாற்றம் பெற்று நாளடைவில் 'வாரங்கல்' — 'வரங்கல்' என்றாயிற்று. ஓரங்கல், வாரங்கல், வரங்கல் என்பவற்றுள் 'கல்' தமிழ்க் கல்லாய் வாழ்கின்றது. தெலுங்கு, வடமொழிப்பற்று மிக்குடையதாகலின், வாரங்கல், 'ஏக சிலா நகரம்' என்னும் பெயரையும் சூட்டிக் கொண்டுள்ளது.

பணி, மனை, இல் முதலியன

'பணி' என்னும் சொல் 'வேலை'க்கு இடங் கொடுத்துத் தமிழிலிருந்து விடுபட்டுத் தெலுங்கில் பெருவழக்காய் ஒன்றி நின்றுவிட்டது.

'மனை' (தமிழ் வீடு) என்பது கன்னடத்தில் வீடமைத்துக் கொண்டது. 'பணிமனை' (Work Shop) இன்று தமிழகத்தில் கால்கொள்ள முயன்று வருகின்றது.

'இல்' என்னும் தமிழ் வீடு தெலுங்கு (இல்லு)க்குச் சென்று விட்டது. 'இல்லாள்'-உம் தெலுங்கு 'இல்லாளு' ஆகி விட்டாள். சம்சாரம், மனைவி, பெண்டாட்டி, ஆம்படையாள், ஒய்ப் என்பவை தமிழில் ஆட்சி செய்து வருகின்றன.

நகுதல்

'தெலுங்கு 'நக', தமிழ் 'நகை' என்பவை ஒரு பொருளன. 'நகுட' என்னுந் தெலுங்குச் சொல் 'நகுதல்' என்னும் பொருளில் வழங்கும். 'நகுதல்' போலல்லாது நகு, நகுட, நவ்வு என்பவை தெலுங்கில் பேச்சு வழக்கிலும் வாழ்கின்றன. 'நகுதல்', சிரித்தலுக்கு இடமளித்து விட்டுத் தமிழில் ஒதுங்கி வாழ்கிறது.

சூல்

'சூல்' என்னும் சொல்லுக்கு நேரான தெலுங்குச் சொல் 'சூலு' என்பதாகும். 'முதல் சூல்' என்னும் பொருளில் 'தொலி சூலு' என்பது தெலுங்கில் வழங்கும் தொடராகும்.

தொல்

'தொல்' என்னும் தமிழ்ச்சொல் தமிழ்ப் பேச்சில் வழங்குவதில்லை. 'தொல்' 'தொலி' என்னும் ஒலிப்புடன் பேச்சுத் தெலுங்கிலும் வழங்குவதைக் கேட்கலாம். 'முன்னுரை' என்னும் பொருளில் தெலுங்கில் 'தொலிமாட' எனும் தொடர் பயன்பாடு மாற்றை அறியலாம்.

நூறுதல்

'நூறுதல்' என்னும் தமிழ்ச் சொல்லும் 'நூறுட' என்னும் தெலுங்குச் சொல்லும் பொடியாக்குதல் என்னும் பொருளில் வழங்குவன. 'நூறுதல்' பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் வழக்கிழந்தது. 'நூறுட' பேச்சுத் தெலுங்கிலும் வழக்கிலுள்ளது.

நெருநல்

'நேற்று' என்னும் பொருளில் நேற்று வழக்கத்திலிருந்த 'நெருநல்' என்னும் சொல் புறநானூற்றிலும் திருக்குறளிலும்

காணப்படுகிறது. அச்சொல்லே சிலப்பதிகாரத்தில் 'நென்னல்' என்று ஒலிமாற்றம் பெற்றது. பேச்சுத் தெலுங்கிலும் இச்சொல் 'நிந்த' என்று வழங்குவதைக் கேட்கலாம்.

நெருநல் > நென்னல் > நிந்ந-நேற்று.

உரும்

'உரும்' என்னும் தமிழ்ச்சொல் 'இடி'யைக் குறிக்கும். தமிழில் வழக்கிலில்லாத இச்சொல் பேச்சுத் தெலுங்கிலும் 'உருமு' என வாழ்வு கொண்டிருப்பதைக் கண்டு வியக்கின்றோம்.

அங்காடி

'அங்காடி' என்னும் தமிழ்ச் சொல் 'கடை'க்கு வாழ்வளித்து விட்டுச் சில அரசுப் பெயர்ப்பலகைகளில் தஞ்சமடைந்திருக்கின்றது. (சிறப்பங்காடி). 'அங்கடி', எழுத்துத் தெலுங்கிலும் பேச்சுத் தெலுங்கிலும் பெருவழக்காகி வாழ்கிறது. தெலுங்கானா தெலுங்கரின் பேச்சில் 'அங்கடி' உருதுமொழிச் சொல்லான 'துக்கானத்'துக்குப் பலியாகி விட்டது.

ஓர்ப்பு

பொறுமை என்னும் பொருள் கொண்ட 'ஓர்ப்பு' என்னுந் தமிழ்ச் சொல், பேச்சுத் தமிழில் வழங்குவதை விட்டுத் தெலுங்கு மொழியில் இடங் கொண்டுப் பேச்சுத் தெலுங்கிலும் வாழ்ந்து வருகிறது.

பழமொழிகள்

தமிழில் வழங்கும் பழமொழிகளைத் தெலுங்கிலும் கேட்கலாம். இப் பழமொழிகளில் வழங்கும் பல சொற்களும் இரண்டு மொழிகளுக்கும் பொதுவாய் அமைந்திருப்பதைக் காணலாம். அவற்றுள் சில;

த : எல்லாரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கை யார் தூக்குவது

தெ : அந்தரு பல்லகி எக்கிதே மோசேவாரு எவரு

த : எட்டினால் தலையைப் பிடி எட்டா விட்டால் காலைப் பிடி.

தெ : அந்நிதே எலிஞா அந்தக போதே காள்ளு.

மாமியார் உடைத்தால் மண்ணு பாண்டம் மருமகள் உடைத்தால் பொன்னுபாண்டம்.

அத்த கொட்டி நகுண்டபாதகுண்ட கோடலு கொட்டி நகுண்ட கொத்த குண்ட.

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா

அத்தகு மீசாலுண்டே மேநமாமா (தாய்மாமன்) வரஸா.

அத்தி பூத்தாபோல
அத்தி பூசி நட்டு.

அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷம்.
அதிகமயிதே அம்ருதம் விஷம்.

அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா
அந்நமு பெட்டி நவாரில்லு கந்நமு பெட்டவச்சுநா.

கொடிக்குக் காய் கனக்குமா
தீககு காயு பருவா

பந்திக்கு முந்தி, படைக்குப் பிந்தி

திண்டிகி முந்து, பநிகி (பணி) வெநக

தாயைப் போலப் பிள்ளை, நூலைப் போல சேலை

தல்லி நி போலிந பிட்ட, நூலுநு போலிந சீர

தாயில் சிறந்த கோயில் இல்லை
தல்லிகண்டே வேறு தைவமு லேது

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா
மட்டி குற்றமுநு நம்மி ஏற்லோ திகிநட்டு

மனநோய்க்கு மருந்துண்டா
மநோவ்யாதிகி மந்து லேது

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன
ராமுடு ராஜ்யம் சேஸ்தே நேமி, ராவணுடு சேஸ்தேநேமி

இரண்டு கையும் தட்டினால்தான் (சத்தம்) ஓசை
ரெண்டு சேதுலு தட்டிதே சப்புடு

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
பலவந்துடிகி பச்சி கட்டே ஆயுதமு

வெல்லப் பிள்ளயாரைக் கிள்ளி நைவேத்யம் செய்கிறது
பெல்ல பிள்ளாரிகி துண்டிகில்லி நைவேத்யம்

நிறை குடம் (நீர்) தளும்பாது
நிண்டு குண்ட தொணகது

முதலியன.

வாய்மொழிப் பாடல்கள்

தமிழிலும் தெலுங்கிலும் வழங்கும் வாய் மொழிப் பாடல்கள் பலவும் ஒலிப்பமைப்பிலும் பொருளமைப்பிலும் ஒத்த தன்மையனவாய் இருப்பதை எடுத்துக் காட்டலாம்.

1. தமிழ்: நிலா நிலா ஓடிவா !
தெலுங்கு: சந்த மாமா ராவே

த: நில்லாமல் ஓடிவா !
தெ: (ஜாபில்லி-நிலா ராவே!)—பொருள் வேறுபடுகிறது

த: மலைமேலே ஏறிவா
தெ: கொண்டெக்கி ராவே !

த: மல்லியப்பூ கொண்டுவா
தெ: கோகு பூலு தேவே

2. த: கை வீசம்மா கைவீசு
தெ: செய்வூச்சம்மா செய்வூச்சு

த: கடக்கி போலாம் கைவீசு
தெ: சந்தக்கு போதாம் செய் வூச்சு

த : மிட்டாய் வாங்கலாம் கைவீசு
தெ : மிட்டாயி தெத்தாம் செய்வூச்சு

த : மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
தெ : மெல்லிகா திந்தாம் செய்வூச்சு

